வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 28.10.2023 சனிக்கிழமை | இதழ் : 323 | பக்கங்கள் : 16

# அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் முன்னேற்றத்திற்காக ஒன்றுபடுவோம்

## அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஒக். 28

கட்சி ஜனநாயக அரசியலுக்குள் காணப்படும் வேறுபாடுகளை அவ்வண்ணமே தக்கவைத்துக் கொண்டு, புதிய நாடு, புதிய பொருளாதாரம் மற்றும் புதிய அரசியலை கட்டியெழுப்பும் பணியில் சகல அரசியல்வாதிகளும் ஒன்றுபட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று நடைபெற்ற “ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழா” நிகழ்விலேயே ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க

11

# பட்ஜெட்டுக்கு ஆதரவா? பெரமுன கூடி தீர்மானம்

கொழும்பு, ஒக். 28

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பது குறித்து கட்சி என்ற ரீதியில் தீர்மானிக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதா, வரவு - செலவுத் திட்டம் தொடர்பான எமது கருத்துக்களை முன்வைப்பதா என்பதை நாம் கட்சி என்ற ரீதியில் தீர்மானிப்போம்.

11

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த 1,000 கோடி ரூபா வேண்டும்!

## பட்ஜெட்டில் ஒதுக்க கோருகிறது தேசிய தேர்தல் ஆணைக்குழு



கொழும்பு, ஒக்ரோபர் 28

**ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அத்தேர்தலை நடத்துவதற்கு 1,000 கோடி ரூபாவை ஒதுக்குமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் ஜனாதிபதித் தேர்த லுக்காக மேற்படி தொகை ஒதுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பான செலவு மதீப்பீட்டு அறிக்கை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை தேர்தல் ஆணையாளர்

11



# மருத்துவபீட மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைத் தாக்குதல்!

கொழும்பு, ஒக். 28

மருத்துவ பீட மாணவர்களின் போராட்டம் மீது நீர்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை வைத்திய பீட மாணவச் செயல்பாட்டுக குழுவினால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தால் கொழும்பு - தாமரை வீதி முழுமையாக மூடப்பட்டதுடன், அதனை அண்மித்த பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கூட்டமைப்பு பொலிஸ் அதிகாரம் கோருவது நகைப்புக்கிடமானது!

## கூறுகின்றது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஒக். 28

மாகாண சபைகளுக்கு இருந்த அதிகாரங்களை நடைமுறைப்படுத்தாத தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சியாளர்கள் பொலிஸ் அதிகாரங்களை தற்போது கோருவது தமது அரசியல் நோக்கத்துக்காகவே அன்றி மாகாண அதிகாரங்களை வலுப்படுத்தவதற்காக அல்ல என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள்

11

# துணுக்காயில் மின் தாக்கி பூசகர் ஒருவர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஒக். 28

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துணக்காய் விநாயகர்புரம் பகுதியில் நேற்று காலை மின்சாரம் தாக்கி பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டு காணியினுள் விதைக்கப்பட்டிருந்த நெல்லுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு நீர்ப்பம்பிக்காக மின்சார இணைப்பினை ஏற்படுத்த முயற்சித்த

11

# சுமணரத்ன தேரரை கைது செய்க!

## சி.ஐ.டியில் நேற்று முறைப்பாடு

கொழும்பு, ஒக். 28

அம்பிட்டிய சுமணரத்ன தேரரை உடனடியாக கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்றை கையளித்துள்ள வடக்கு-கிழக்கு மக்கள் போராட்டத்துக்கான ஆதரவு இயக்கத்தின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ராஜீவ்காந், தமிழ் மக்களை வெட்டிக் கொலை செய்யப்போவதாக தேரர் மிரட்டியமைக்கான வீடியோ ஆதாரத்தையும் கையளித்துள்ளார்.

11

# கிழக்கு மாகாணத்தில் இனவாதம், மதவாதம் பரப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## ஆளுநர் செந்தில் தொண்டமான் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28

கிழக்கு மாகாணத்தின் காணி விடுப்பு பணிகள் மகாவலி அமைச்சின் கீழே சட்டரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்,அந்த பணிகள் ஒரு போதும் இன, மத அடிப்படையில் முன்னெடுக்கப்படாது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அந்த பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்த முற்படும் மூன்றாம் தரப்பினருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் ஆளுநர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணத்தின் மயிலத்தமடு

11

# புறக்கோட்டையில் பெரும் தீ விபத்து!

## ஆறு பேரின் நிலைமை கவலைக்கிடம்



கொழும்பு, ஒக். 28

கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள ஆடை வர்த்தக நிலையமொன்றில் நேற்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் 15 பேர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஒரு நாள் கார் டிரைவர் தன் வண்டியை எடுத்துக்கொண்டு வேலைக்கு கிளம்பினார். சிறிது தூரம் சென்றதும் அவர் கார் 'ரயர் பஞ்சர்' ஆகிவிட்டது.

அவர் வண்டி பஞ்சர் ஆன இடம் ஒரு மனநல மருத்துவமனை அருகில். சுற்றும் முற்றும் ஏதாவது மெக்கானிக் கடை இருக்கிறதா என்று பார்த்தார். எதுவுமே இல்லாததால் அவரே கழற்றி மாற்றலாம் என்று முடிவெடுத்து சில்லுகளில் உள்ள 'நட்டு'க்களை கழற்ற ஆரம்பித்தார்.

நான்கையும் கழற்றி வைத்து விட்டு 'ஜக்கை' எடுத்து வரச் சென்றார். எடுத்து வரும்போது அவர் கால் இடறி நான்கு 'நட்டு'க்களும் அருகில் இருந்த கால்வாயில் விழுந்துவிட்டது. எப்படி எடுக்கலாம் என்று யோசித்து கொண்டு இருந்தார். அப்போது 'ஏதாவது பிரச்னையா டிரைவர்' என்று ஒருவர் கேட்டார். அவரை பார்த்த டிரைவர், மனநல மருத்துவமனையின் நோயாளி இவர், எப்படியாவது இவரை சாக்கடையில் இறக்கி 'நட்டுக்களை' எடுத்துவிட வேண்டும் என்று முடிவெடுத்து நடந்த கதையை அவரிடம் கூறினார்.

உடனே அந்த நபர், மற்ற மூன்று சக்கரங்களில் இருந்து தலா ஒரு 'நட்டை' கழற்றி, இந்த சக்கரத்தில் மாட்டி, அருகில் உள்ள மெக்கானிக் கடையில் நான்கு 'நட்டு'க்களையும் வாங்கி எல்லா சக்கரத்திலும் மாட்டிக் கொள் என்று சொன்னார்.

இவ்வளவு தெளிவா இருக்கறீங்க நீங்க எப்படி இந்த மருத்துவமனையில் என்று கேட்டார். இந்த மருத்துவமனையில் இருக்கிற எல்லாரும் முட்டாளும் இல்லை. வெளியில் சுத்துற எல்லாரும் புத்திசாலியும் இல்லை என்றார் மனநல நோயாளி.

அண்மைக்காலமாக சம்பந்தனின் இயலாமை பற்றி ஈழநாடு குறிப்பிட்டு வருகின்றது வாசகர்கள் அறிந்ததுதான். அவர் உடல் ரீதியாக சற்று வலுவிழந்துபோனாலும் தமிழ் மக்களின் தலைமைப் பதவி இப்போதும் அவரிடம்தான் இருக்கின்றது.

அதனால்தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கட்சிகள் சார்பில் பொதுவேட்பாளரை களம் இறக்கவேண்டும் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டபோது அதற்கு பொருத்தமான வேட்பாளர் சம்பந்தன் தான் என்று இந்தப்பத்தியிலும் எழுதியிருந்தோம். நாம் அவ்வாறு எழுதிய மறுநாள், சம்பந்தனினால் அரசியலுக்கு கொண்டு வரப்பட்டவர்களில் ஒருவரான சுமந்திரனோ சம்பந்தன் பதவி விலகி ஓய்வுபெறவேண்டும் என்று பகிரங்கமாக கோரிக்கை விடுத்திருந்தார்.

இப்போது, சுமந்திரனோடு எப்போதும் மல்லுக்கட்டும் மற்றுமொரு சட்டத்தரணியும், தமிழரசின் மத்தியகுழு உறுப்பினருமான கே.வி. தவராசாவோ, சுமந்திரன் கட்சியை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிக்கிறார் என்று சம்பந்தனுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

சம்பந்தனால் இனி இயங்கவே முடியாது என்று ஒருவர் சொல்ல, மற்றுமொருவரோ அதே சம்பந்தனிடமே முறையிட்டு கடிதம் எழுதுகிறார்.

சம்பந்தன் ஐயா பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும் என்று சுமந்திரன் தெரிவித்தது, ஒரு சிங்கள தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் கலந்துகொண்டு, தன்னிடம் கேட்ட கேள்விக்கு பதிலளித்தபோது. அந்த விவாதத்தில், சம்பந்தனுக்கு நாற்பது லட்சம் ரூபா சம்பளமாகவும், நான்கு லட்சத்திற்கும் அதிகமான பணம் எரிபொருள் செலவுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது என்றும் பாராளுமன்றம் 288 நாட்கள் கூடியுள்ள போதிலும் அவரோ வெறும் 39 நாட்கள் மாத்திரமே சமூகமளித்ததாகவும் கூறியபோதே சுமந்திரன் அவர் பதவி விலகவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

யார் என்ன சொன்னாலும் சம்பந்தன் இன்றும் தமிழர் தலைவரே. அவர் பாராளுமன்றம் வராதது பற்றி கேள்வி எழுப்பப்படும்போது அவருக்காக வாதாடவேண்டிய சுமந்திரனோ, அவரை கேலி செய்யும் வகையில் கருத்துத் தெரிவித்திருப்பது பலரும் எதிர்பார்க்காததுதான்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 எம்.பிக்களில் பலர் ஒருநாள் கூட பாராளுமன்றத்தில் பேசியதில்லை. அதிகம் ஏன் நமது எம்.பிக்களில் சிலர் கூட ஓரிரு நாட்கள் மாத்திரமே பாராளுமன்றில் உரையாற்றியிருக்கின்றனர். சம்பந்தன் பாராளுமன்றம் வராமல் சம்பளம் எடுப்பதை கேள்விக்கு உட்படுத்தும்போது, சம்பந்தனின் சட்டத்தரணியாக செயல்பட்டு, அவருக்காக வாதாடவேண்டியவர் சுமந்திரன்.

அவர் எதற்காக சம்பந்தனை கேலி செய்தார் என்பது அவருக்கு மாத்திரம் தெரிந்த சங்கதி.

சுமந்திரன் மீது அண்மைக்காலத்தில் சம்பந்தன் நம்பிக்கையை இழந்துவிட்டது பற்றியும் இதுபற்றி ஒரு பங்காளிக்கட்சித் தலைவருடன் அவர் மனம்விட்டு பேசியது பற்றியும் சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியிலும் எழுதியிருந்தோம்.

அதிகம் ஏன் சில மாதங்களுக்கு முன்னர் தமிழரசின் செயற்குழுக் கூட்டத்திற்கு திருகோணமலையிலிருந்து ஒரு தொண்டர் அணியுடன் வந்து கலந்துகொண்ட ஒரு பிரமுகர், திருகோணமலை மக்களின் பிரச்னைகளை சம்பந்தனால் கவனிக்க முடியவில்லை என்றும், எனவே அவர் பதவி விலகவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தது ஞாபகமிருக்கலாம். அப்போது தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தாவோ, சம்பந்தன் திருமலை பிரதிநிதியாக வேறு ஒருவர் தெரிவாகுவதற்காக பதவி விலகினாலும், தேசியப்பட்டியல் ஊடாக அவர் தொடர்ந்து பாராளுமன்றில் இருக்கவேண்டும் என்று அறிக்கை வெளியிட்டது ஞாபகம். அவர் அவ்வாறு கோரிக்கை விடுத்தது தமிழ் தேசியத்தின் மீது அவருக்கிருந்த பற்றுக்காரணமாகவே.

மனநலநோயாளி என்று டிரைவர் நினைத்ததுபோல சம்பந்தனையும் இனி இயலாதவர் என்று நினைத்து சுமந்திரன் அப்படிச் சொன்னாரோ தெரியவில்லை. இதற்கு சம்பந்தன் ஐயாவின் எதிர்வினை எப்படியிருக்கும் என்பது ஒரு சில நாட்களில் தெரிந்துவிடும். அல்லது தவராசா சொல்வது சரியாகிவிடுமோ என்பதும் தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.!

**-ஊர்க்குருவி.**

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கக் கூட்டத்தில் கைகலப்பு

## 7 பேர் பொலிஸாரால் கைது

வவுனியா, ஒக். 28

வவுனியாவில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரிடையே ஏற்பட்ட கைகலப்பு தொடர்பாக 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்துக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அண்மையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றிருந்ததுடன், அதில் இருந்த ஒரு பகுதியினர் வெளியேறியிருந்தனர்.

வெளியேறிய அணியினரை வைத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் வவுனியா மாவட்டத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு ஒன்றை மேற்கொள்வதற்காக கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்நிலையில் கூட்டத்துக்கு வருகை தந்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க உறுப்பினர்கள் மற்றும் வவுனியாவில் அண்மையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்துக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

பாதிக்கப்பட்ட தாய்மார் தமக்குள் கைகலப்பில் ஈடுபட்டனர். இதனையடுத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி தம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக முறையிட்டனர்.

கூட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த வவுனியா நகரசபை செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கூட்டத்தை நடத்தவிடாது இரு பகுதி தாய்மாரையும் அங்கிருந்து வெளியிற்றினர்.

வெளியேறிய இரு பகுதியினரும் வவுனியா பொலிஸ் நிலையம் சென்று தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்தனர். குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, இரு பகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வராது ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நிலையில் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

(அ)

# ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு சரியான தீர்வுகளை வழங்க பாடுபடுவேன்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதி



கொழும்பு, ஒக். 28

யார் பிரச்னையை ஏற்படுத்தினாலும் பொறுப்புக்களை ஏற்றவர்கள் என்ற வகையில் சரியான தீர்வுகளை வழங்க பாடுபடுவேன் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல சவால்கள் இருந்த வேளையில் நான் கல்விக்கு பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டேன். அந்த சவால்களுக்கு படிப்படியாக தீர்வுகளை வழங்குவதன் மூலம் முன்னேறுவது எனது நம்பிக்கை.

ஆசிரியர் சங்கங்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி இதுவரையில் எழுந்துள்ள பிரச்னைகளை தீர்த்து வைத்துள்ளேன். வரவு-செலவுத் திட்ட ஆவணம் வெளிவரவுள்ள நிலையில், ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டுமன்றி ஏனைய சேவைகளுக்கான சம்பள முரண்பாடுகளை களைய வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து சில ஒதுக்கீடுகளை ஒதுக்கித் தருமாறு பரிந்துரைத்துள்ளோம்.

அதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம். ஆனால் கருவூலம் நாட்டின் பொருளாதாரத்தில் கவனம் செலுத்துகிறது - என்றார்.

(அ)

# காவி உடை தரித்து கூத்தாடி போல் கொக்கரிக்கும் அம்பிட்டிய தேரரை உடன் கைது செய்யவேண்டும்

## பழனி திகாம்பரம் காட்டம்



கொழும்பு, ஒக். 28

தமிழர்களை வெட்டுவேன் என மிரட்டியுள்ள மட்டக்களப்பு அம்பிட்டிய சுமணரத்தின தேரர் உடன் கைது செய்யப்பட வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்த பெருமான் அன்பையும், அகிம்சையையும் , நல்வழியையுமே இவ்வுலகுக்கு போதித்தார். ஆனால் அவர் வழியில் நடப்பதாகக்கூறி காவி உடை தரித்துள்ள அம்பிட்டிய சுமண தேரர், தெருவுக்குவந்து 'கூத்தாடி'போல் கொக்கரித்துக் கொண்டிருக்கின்றார்.

தமிழர்களை வெட்டுவேன், கொத்துவேன் என சினிமாப்பட 'ரௌடிகள்'போல் எச்சரித்து வருகின்றார்.

இவ்வாறு யார் செயற்பட்டாலும் அது தவறுதான். இந்நாட்டில் உள்ள சட்டம் அனைவருக்கும் சமம் எனில், குறித்த தேரர் உடன் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அம்பிட்டிய தேரருக்கு ஏதேனும் அநீதி இடம்பெற்றிருந்தால் நீதியை பெறுவதற்கு சட்டரீதியிலான வழிகள் உள்ளன.

அதைவிடுத்து சட்டத்தை கையில் எடுத்து செயற்பட முற்படுவது காட்டுமிராண்டித்தனம். அதுவும் தமிழர்களை எச்சரித்து, இனவாதத்தை தூண்டும் அவரின் நடவடிக்கையை அனுமதிக்க முடியாது.

இது தொடர்பில் ஜனாதிபதியும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிட வேண்டும் - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
28.10.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேவை துணிகரமான அரசியல் நடவடிக்கைகள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை வித்தியாசமான ஜனாதிபதியாக காண்பிக்கும் நோக்கில் பல்வேறு விடயங்களை பேசி வருகின்றார். ஒப்பீட்டடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவிடம் இனவாத வேலைத்திட்டம் இல்லைதான். தீவிர இனவாத கருத்துக்களை எப்போதுமே ரணில் வெளிப்படுத்தியதில்லை. இந்த பின்புலத்தில், தென்னிலங்கையின் ஏனைய அரசியல்வாதிகளுடன் ஒப்பிட்டால், ரணில், சற்று மாறுபட்டவர்தான். ஆனால், இனவாத சக்திகளுக்கு எதிரான கடும் நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய ஒரு துணிகரமான அரசியல்வாதியாக அவரால் இதுவரை தன்னை நிரூபிக்க முடியவில்லை.

இந்த நிலையில் இனவாத நடவடிக்கைகளுக்கு அரசியல்வாதிகள் துணைபோகக் கூடாது - நாட்டை கட்டியெழுப்பும் முயற்சியில் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென்று ரணில் குறிப்பிட்டிருக்கின்றார். இப்படியாக, நிகழ்வுகளில் பேசுவதனால் மட்டும், இனவாத நிகழ்சிநிரலை தோற்கடிக்க முடியுமா? ரணில் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கின்றபோது, மட்டக்களப்பில், ஒரு பௌத்த பிக்கு, தமிழர்கள் அனைவரையும் வெட்டுவேன் என்று கூறுகின்றார். இதற்கு முன்னர் ஓர் அரசியல்வாதியும் அவ்வாறு கூறினார். ஆனால், இவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ரணில் அதிகாரத்தில் இருக்கின்ற போது, இடம்பெறும் இவ்வாறான விடயங்களுக்கு எதிராக எவ்வாறான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது?

இலங்கையின் அரசியலில் இனவாதத்தை ஒரு முதலீடாகக் கொண்டிருப்பவர்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகள்தான். வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அல்லர். தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள மேலாதிக்க நிகழ்ச்சிநிரலை எதிர்த்து குரல் கொடுக்கின்றனரேயொழிய, சாதாரண சிங்கள மக்களுக்கு எதிராக பேசவில்லை. கடந்த காலத்தில் சிங்கள மக்களுக்கு எதிராக சில விடயங்கள் இடம்பெற்றபோது, தமிழ் அரசியல்வாதிகள் மௌனம் சாதித்திருந்தமை உண்மையானாலும் கூட, சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரான இனவாத சிந்தனையை பரப்புவதை, தமிழ் அரசியல்வாதிகள் ஒரு அரசியல் முதலீடாகக் கொண்டிருக்கவில்லை.

தோசே - மசால் வடே அப்பிட்ட எப்பா - என்பதில் தொடங்கி, அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை கூட அமுல்படுத்தவிடப் போவதில்லையென்னும் கடும்போக்கு வாதத்தை தொடர்ந்தும் விதைத்துக் கொண்டிருப்பவர்கள் பௌத்த பிக்குகளும், குறிப்பிட்ட சிங்கள கடும்போக்கு அமைப்புக்களும்தான். எனவே இனவாதத்தை தோற்கடிக்க வேண்டுமாயின், இனவாதத்தை ஒரு கருவியாக் கொண்டு அரசியலை கட்டுப்படுத்த நினைப்பவர்கள் இயங்க முடியாத சூழலை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு நிகழ வேண்டுமென்றால், இனவாதத்தை உயர்த்திப்பிடிக்கும் - அதே வேளை, தமிழ் மக்களுக்கு எதிரான துவேசத்தை பரப்புவர்களுக்கும் எதிராக, கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதனைச் செய்யும் துணிவுடன் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றாரா? இனவாதமற்ற அரசியலை ரணில் முன்னெடுக்க விரும்பினால், அதற்கான முன்நிபந்தனை ஒன்றுதான், அதாவது, இனவாதத்தை கையிலெடுத்து, அரசியலில் ஆதாயம் தேடலாமென்று எண்ணுபவர்கள் அச்சப்பட்டு, அதனை கைவிடக் கூடிய புறச்சூழலை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், இனவாதத்தை ஓரம்கட்ட முடியாது.

# ஜனாதிபதி செயலகத்தில் நந்திக்கொடி பறக்க விடுக!

## மறவன்புலவு சச்சிதானந்தன் வேண்டுகோள்

*யாழ்ப்பாணம், ஒக். 28*

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தின் முன்றிலில் நந்திக் கொடியை ஏற்றி வைக்குமாறு சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு க.சச்சிதானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் குடியரசுத் தலைவர் அலுவலக முன்றலில் நந்திக்கொடியை ஏற்றி வைக்குமாறு குடியரசுத் தலைவர் அவர்களை இலங்கை வாழ் இந்துக்கள் அனைவரும் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையின் தொடக்க காலத்திலிருந்து இன்றுவரை தொடரும் நம்பிக்கை நெறி சைவம்.

75 ஆண்டுகால அண்மைக்கால விடுதலை வரலாற்றில், மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சியில், குடியரசுத் தலைவர் அலுவலகம் முன்பு, தீபாவளி நாளன்று நந்திக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வரலாற்றுச் சாதனை நிகழ்த்தினார். நந்திக் கொடியைக் குடியரசுத் தலைவர் அலுவலகம் முன்பு பட்டொளி வீசிப் பறக்க ஏற்றினார்.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே,

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் நந்திக் கொடிகளைத் தீபாவளி நாள் அன்று குடியரசுத் தலைவர் அலுவலகம் முன்பு பறக்க விடுவீர்கள் ஆக.

இலங்கை வாழ் இந்துக்களின் வாழ்த்துக்களையும் போற்றுதல்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது. (அ)

# சம்பந்தனின் முதுமையை காரணம் காட்டி தலைவர் பதவிக்கு ஆசைப்படும் சுமந்திரன்

## ஈ.பி.டி.பி குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், ஒக். 28*

சம்பந்தனின் முதுமையை காரணம் கூறி கூட்டமைப்பின் தலைவர் பதவியை குறிவைக்கும் நோக்கில் சுமந்திரன் எம்.பி காய் நகர்த்துவதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் குற்றம் சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சம்பந்தன் ஐயாவுக்கு முதுமை ஏற்பட்டது என்பது சுமந்திரன் கூறித்தான் தெரிய வேண்டியது அல்ல.

ஏற்கனவே சம்பந்தன் ஐயா பதவி விலகி மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் தற்போது சுமந்திரன் சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்துக்கு எத்தனை தடவைகள் வந்தார் என கணக்கு போட்டு கூறுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

சம்பந்தன் தலைமை பதவியை இலக்கு வைத்து சுமந்திரன் காய் நகர்த்துவதாக அரசியல் பரப்பில் பேசப்பட்டு வரும் நிலையில் அவருடைய கருத்து தலைமை பதவியை இலக்கு வைத்துத் தான் என எண்ண தோன்றுகிறது - என்றார். (அ)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சென்ற முஜிபுர்

*கொழும்பு, ஒக். 28*

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி மாளிகையில் கிடைத்த பணம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளச் சென்றார்.

அங்கு கருத்து தெரிவித்த முஜிபுர் ரஹ்மான்,


பிரஜைகள் அமைப்பினர் வந்து இந்தப் பணம் குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணிகள் வந்து பணம் தமக்கே சொந்தம் என்பதை ஒப்புக்கொண்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இந்த வழக்கை முன்னெடுக்க முடியாது என்று கூறுகின்றனர்.அது எனது பணம் என்று கோட்டாபய கூறினால் இதற்கு மேல் ஆதாரம் தேவையில்லை.

இந்தப் பணத்தை அவர் எப்படி வைத்திருந்தார், எங்கிருந்து பெற்றார் என்பதைக் கண்டுபிடிப்பதே இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் கடமையாகும்.இதன் மூலம் ராஜபக்ஷ மீது போடப்பட்ட சுமார் 48 முதல் 50 வழக்குகளை லஞ்ச ஊழல் ஆணைக்குழு வாபஸ் பெற்றது.

புதிய இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறுகின்ற போதிலும் அதிகாரிகள் இதுவரை நியமிக்கப்படவில்லை. கோட்டாபயவின் பணம் தொடர்பான வழக்கை வாபஸ் பெறுவது தொடர்பான தகவல்களை கோருவதற்காகவே இன்று வந்துள்ளோம் - என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். எதிலும் கவனம் தேவை.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். பாராட்டப்படுவீர்கள்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகை கிடைக்கும்.

**தனுசு**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் மறைமுகப் பிரச்னைகள் வரும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

# காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவர் தாக்குதல் தடுக்கப்படும்

## இலங்கை தூதரகம் முற்றுகையில் நாராயணசாமி உறுதி

**சென்னை, ஒக். 28**

**வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்படும் என புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி கூறியுள்ளார்.**

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கக்கோரியும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்கக்கோரியும், அகில இந்திய மீனவர் காங்கிரஸ் சார்பில் இலங்கை தூதரகம் முற்றுகைப் போராட்டம் சென்னையில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய நாராயணசாமி பேசியதாவது:

காங்கிரஸ் ஆட்சியில் இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும், படகுகளை பறிமுதல் செய்தாலும் அப்போது மத்திய இணையமைச்சராக பதவி வகித்த நான் உடனடியாக அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கை தொடர்பு கொண்டு பிடிபட்ட மீனவர்களை 24 மணி நேரத்துக்குள்ளும், படகுகளை 48 மணி நேரத்துக்குள்ளும் விடுவிக்க நடவடிக்கை எடுத்தேன். ஆனால், தற்போதைய பாஜக ஆட்சியில் மீனவர்களை பற்றி கவலைப்படுவதில்லை. அவர்களது பிரச்னைகள் தீர்க்கப்படுவது இல்லை.

தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் எல்.முருகன் மீனவர்களின் பிரச்னைகளை தீர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வரும் 2024ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்படும்-என்றார். (அ)

# பாஜக-அதிமுக கூட்டணி முறிவு என்பது நம்ப முடியாத நாடகம்!

## உதயநிதி கருத்து

சென்னை, ஒக். 28

பாஜக உடனான கூட்டணி முறிவு என்று அதிமுக கூறுவது நம்ப முடியாத நாடகம் என்று அமைச்சர் உதயநிதி கூறினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி நேற்று முன் தினம் தேனி மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

முதற்கட்டமாக லோயர் கேம்ப் மணிமண்டபத்தில் உள்ள கேர்னல் ஜான்பென்னிகுவிக் சிலைக்கு மாலை அணிவித்தார்.

பின்னர் கம்பத்தில் திமுகவின் 1,066 மூத்த தொண்டர்களுக்கு ரூ.10 ஆயிரம் பொற் கிழி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர்கள் கம்பம் என்.ராம கிருஷ்ணன் (தெற்கு), தங்க தமிழ்ச்செல்வன் (வடக்கு) ஆகியோர் தலைமை வகித்தனர். அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்துரை வழங்கினார்.

பொற்கிழி வழங்கி அமைச்சர் உதயநிதி பேசியதாவது:

எனது முதல் அரசியல் பயணம் 2019 பெப்ரவரியில் ஆண்டிபட்டியில் நடந்த கிராம சபைக் கூட்டத்தில் தான் தொடங்கியது. அந்த வகையில் எனது பொது வாழ்வுக்கு அடித்தள மிட்டது தேனி மாவட்டம் தான். எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும் மூத்த தொண்டர்களை கவுரவிக்கும் நிகழ்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுப்பேன்.

மூத்த தொண்டர்கள் பெரியார், அண்ணா போன்ற தலைவர்களை பார்த்திருக்கிறார்கள், இணைந்து பணியாற்றி இருக்கிறார்கள். அந்த வகையில் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது. கட்சியின் வரலாறே நீங்கள்தான்-என்றார். (அ)

# சென்னை வந்தார் ஜனாதிபதி முர்மு!

## ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு

சென்னை, ஒக். 28

இந்திய கடல்சார் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்காக 2 நாள் பயணமாக சென்னை வந்த குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர்.



சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் 8ஆவது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு சிறப்பு விருந்தினராக பங்கேற்று, மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இதற்காக, பெங்களூருவில் இருந்து நேற்று முன் தினம் மாலை 6 மணிக்கு விமானப் படை விமானத்தில் புறப்பட்ட அவர், 6.50 மணிக்கு சென்னை வந்தடைந்தார்.

சென்னை விமான நிலையத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ஆகியோர் வரவேற்றனர். தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, டிஜிபி சங்கர் ஜிவால், சென்னை காவல் ஆணையர் சந்தீப்ராய் ரத்தோர் உள்ளிட்டோரும் குடியரசுத் தலைவரை வரவேற்றனர்.

பின்னர், கார் மூலம் கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு சென்ற அவர், இரவு உணவை முடித்து அங்கேயே தங்கினார்.

குடியரசுத் தலைவர் முர்முவை தமிழகத்தின் முக்கிய பிரமுகர்கள் சிலர் நேற்று சந்தித்து பேசினர். (அ)

# சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க கிளிநொச்சியில் விசேட வேலைத்திட்டம்!

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, ஒக். 28

**கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.**



கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் கடத்தல் மற்றும் வனங்களில் மரங்களை வெட்டுதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும், சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தி சந்தேக நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் நேற்றைய கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பாதுகாப்பு தரப்பினருக்கு கூட்டத்துக்கு தலைமை தாங்கிய தலைவர்களால் அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்லாறு, கிளாலி, முருசுமோட்டை, குடமூர்த்தி, உமையாள்புரம் அக்கராயன்குளம் மற்றும் குஞ்சுப்பரந்தன் உட்பட பல பிரதேசங்களில் நடைபெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் பல காண்பிக்கப்பட்டன.

பொலிஸ் மற்றும் இராணுவம், இதனுடன் தொடர்புடைய திணைக்களங்களுடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 158 ரிப்பர் ரக வாகனங்களும் நூற்றுக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச உயர் அதிகாரிகள் சிலர்கூட ரிப்பர் வண்டிகளை பயன்படுத்தி மணல் கடத்தலில் ஈடுபடுவது தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு கருதி பாடசாலை நாட்களில் காலை 7 மணி முதல் 8 மணி வரையும், பிற்பகல் 1 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நகர எல்லை உட்பட பரந்தன் சந்தி வரை ரிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்களின் போக்குவரத்தை நிறுத்துவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கூறிய நேர எல்லைக்குள் ஏனைய வாகனங்களின் வேக வரம்பை மணிக்கு 40 கி.மீ ஆக குறைக்கவும் முடிவு செய்யப்பட்டதுடன், இந்த விதிகளை மீறும் சாரதிகள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் சூரிய சக்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மீள்குடியேற்றப்பட்ட மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மின்சாரம், நீர்ப்பாசனம், வீடமைப்பு, கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், எதிர்காலத்தில் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் இங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் வடமாகாணத்தில் 25,000 நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல், சூரிய சக்தி மற்றும் மின்சார உற்பத்தித் திட்டங்கள் உட்பட மக்களுக்கு பயனளிக்கும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பாதுகாப்பு திணைக்களங்களின் தலைவர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (அ)

# மோட்டார் சைக்கிளுடன் கார் நேருக்கு நேர் மோதி விபத்து!

## சிறுவன் பலி! தந்தை படுகாயம்!!

கொழும்பு, ஒக். 28

கொழும்பு-மகரகம பகுதியில்நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 7 வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 7 வயதுடைய லோகேஸ்வரன் சயந்தன் என்ற சிறுவனே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற உயிரிழந்த சிறுவனின் தந்தையான 38 வயதுடைய ராமச்சந்திரன் லோகேஸ்வரன் என்பவர் படுகாயங்களுடன் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் பாதிக்கப்பட்ட தந்தையும் மகனும் நீர்கொழும்பை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரின் சாரதி சிறு காயங்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அரகலயவின் பின்னரும் பாடம் கற்காத பெரமுன

## ராஜித சேனாரத்ன விசனம்



கொழும்பு, ஒக். 28

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் உண்மையான நிலை தெரியவரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அரகலய சம்பவத்தின் பின்னரும் பாடம் கற்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அரகலய சம்பவத்தின் பின்னரும் பாடம் கற்கவில்லை. அவர்கள் தமது கட்சி பற்றி மாத்திரமே பேசுகின்றனர்.

பெரமுன உறுப்பினர்கள் நாட்டை பற்றியோ மக்களை பற்றியோ பேசுவதில்லை. அவர்கள் கட்சியை பலப்படுத்துவதற்கு மாத்திரமே விரும்புகின்றனர். இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் உண்மையான நிலை தெரியவரும்-என்றார். (அ)

# வவுனிக்குளத்தின் கீழான பெரும்போக நெற்செய்கைக்கு 6,060 ஏக்கர் ஒதுக்கம்

முல்லைத்தீவு, ஒக். 28

முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளத்தின் கீழான பெரும்போக நெற்செய்கைகாக துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குற்பட்ட பகுதிகளும், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளுமாக 6 ஆயிரத்து 60 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன் தினம் நடைபெற்ற வவுனிக்குளம் காலபோக நெற்செய்கைக்கான பங்கீட்டுக் கூட்டத்தின்போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் காலை வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் உமா மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கமநல காப்புறுதி சபையின் உதவிப்பணிப்பாளர், மாவட்ட நீர்வாழ் உயிரின வள விரிவாக்கல் உத்தியோகத்தர், மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களம், மாவட்ட வனத்துறை உத்தியோகத்தர், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# யாழ். நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் தீ பரவல்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ். நகர் காங்கேசன்துறை வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் சேதம் ஏற்பட்டுள்ளது.

கோயில் சிலைகள், பித்தளை உபகரணங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்றிலேயே நேற்று முன் தினம் இரவு தீ விபத்து ஏற்பட்டது.

குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் வர்த்தக நடவடிக்கைகளை முடித்துவிட்டு கடையை பூட்டிவிட்டு வீட்டுக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் திடிரென வர்த்தக நிலையம் தீப் பிடித்து எரிவதை அருகிலுள்ள வர்த்தக நிலையத்தவர்களும் வீதியால் சென்றவர்களும் அவதானித்து வர்த்தக நிலைய உரிமையாளருக்கு தகவல் வழங்கினர்.

மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருக்கும் விடயம் தெரிவிக்கப்பட்டது.



இதன் பின்னர் அங்கு வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அத்தோடு மின்சார சபையினருக்கும் அறிவிக்கப்பட்டு மின்சார இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

எனினும் வர்த்தக நிலையத்தில் இருந்த பெருமளவிலான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியதுடன் வர்த்தக நிலையத்திலும் சேதம் ஏற்பட்டுள்ளது.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் மின்னொழுக்கு காரணமாக குறித்த தீ விபத்து ஏற்பட்டதாக தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கட்சியின் மொத்தக் கட்டுப்பாட்டையும் தன் பிடிக்குள் இழுக்க சுமந்திரன் சூழ்ச்சி

## கே.வி.தவராசா சம்பந்தனுக்கு கடிதம்

**கொழும்பு, ஒக். 28**

**அரசியல் ரீதியில் இரா.சம்பந்தனை ஓரங்கட்டிவிட்டு கட்சியின் மொத்தக் கட்டுப்பாட்டையும் தனது பிடிக்குள் கொண்டுவர பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சூழ்ச்சி செய்வதாக சட்டத்தரணி கே.வி.தவராசா குற்றம் சாட்டியுள்ளார்.**



இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கடிதமொன்றை எழுதியுள்ள அவர், உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்பு மனுக் கோரப்பட்டபோது, சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்து தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்தியதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால் அரசியலை விட்டும் விலகப் போவதாகக் கூறிய சுமந்திரன், தற்போது உங்களைப் பதவி விலகச் சொல்வது வேடிக்கையானது என்றும் கே.வி.தவராசா, சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சுமந்திரன் திட்டமிட்டு சிதறடித்தமையின் நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து உங்களைத் தூக்கியெறிவதே என்றும் கே.வி.தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே உடனடியாகக் கட்சியை மீட்டு தமிழ்த் தேசியத்தின் கனவுகளைச் சுமந்த மக்களின் அபிமானமிக்க தமிழ்த் தேசியவாதி ஒருவரைக் கொண்டு தலைமைத்துவத்தைப் பலப்படுத்தவேண்டும் என்றும் அதை செய்யாமல்விட்டால் அது இனத்துக்கு இழைக்கப்படும் வரலாற்றுத் துரோகம் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# சிறு மற்றும் மத்திய தர மக்களுக்காக கொழும்பு நகரில் 5 வீட்டுத்திட்டங்கள்!

கொழும்பு, ஒக். 28

சிறு மற்றும் மத்தியத்தர மக்களுக்காக கொழும்பு நகரத்தில் 5 வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதற்கான இணக்கப்பாட்டினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின் பின்னர் வீடமைப்பு அதிகார சபையில் தடைப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)

# 28 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஒக். 28

குவைத்தில் நீண்ட காலமாக விஸா இன்றி, சட்டவிரோதமாக தங்கியிருந்து பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வந்த இலங்கை வீட்டுப் பணியாளர்கள் 28 பேர் கொண்ட குழுவினர் நேற்று குவைத்திலிருந்து, இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

மேற்படி குழுவினர் நேற்றுக் காலை 06.30 மணியளவில் குவைத்தில் இருந்து சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் 24 வீட்டுப் பணிப் பெண்களும் 04 வீட்டுப் பணியாளர்களும் அடங்குவதுடன், அநுராதபுரம் மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்களே அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு வருகை தந்த அனைவருக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தமது சொந்த ஊர்களுக்கு செல்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் போக்குவரத்துச் செலவுக்கு தேவையான பணம் வழங்கப்பட்டது. (அ)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 28

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் 12 போரையும் எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 14ஆம் திகதி நெடுந்தீவு அருகே அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட போது இலங்கை கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டதோடு அவர்களின் 3 படகும் கைப்பற்றப்பட்டன.

இதனை அடுத்து கடந்த 15 ஆம் திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் விளக்கமறியல் காலம் நேற்று மேலும் நீடித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# திருடப்பட்ட கடவுச்சீட்டுடன் இலங்கை வந்த சீனப் பெண் நாடு கடத்தப்பட்டார்!

கொழும்பு, ஒக். 28

53 வயதான சீனப் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட மற்றும் தொலைந்துபோன கடவுச்சீட்டு தரவுத்தளத்தில் சர்வதேச பொலிஸாரினால் பட்டியலிடப்பட்ட கடவுச்சீட்டுடன் இவர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 9.20 மணியளவில் சீனாவின் குன்மிங்கில் இருந்து சீனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, சர்வதேச பொலிஸாரினால் பட்டியலிடப்பட்டுள்ள திருடப்பட்ட மற்றும் தொலைந்த கடவுச்சீட்டு தரவுத்தளத்தில் அவர் வழங்கிய கடவுச்சீட்டு இடம்பெற்றுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக குறித்த பெண்ணை கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள எல்லை கண்காணிப்பு பிரிவினரிடம் பிரதான குடிவரவு குடியகல்வு அதிகாரி ஒப்படைத்துள்ளார்.

இதனையடுத்து அவர் கட்டுநாயக்கவிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளார். (அ)

# மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராக கறுப்புக்கொடி போராட்டத்துக்கு அழைப்பு

கொழும்பு, ஒக். 28

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும், புனித ஸ்தலங்களிலும் கறுப்புக்கொடி ஏற்றுமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுப்பதாக மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.




நேற்று முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இதனை நடைமுறைப்படுத்துமாறும் பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று போயா தினத்தன்று (28) இரவு 7.00 மணி முதல் 7.30 மணி வரை அரை மணி நேரம் மின் விளக்குகளை அனைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அந்த அரை மணி நேரம் அனைத்து மின் விளக்குகளையும் அனைத்து அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பை தெரிவிக்குமாறும் மக்களிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் கொழும்பு - குருநாகல் பஹு வீதியில் திவுலப்பிட்டி பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக காலை 8.00 மணிக்கு மின் பாவனையாளர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு பேரணியை ஆரம்பிக்கவுள்ளன.

குறித்த பேரணி திவுலப்பிட்டியில் இருந்து கொழும்பில் அமைந்திருக்கும் பிளவர் வீதியில் உள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு வரை வருகைத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது-என்றார். (அ)

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை:

# வர்த்தகர்களை இலக்கு வைத்து சோதனை நடவடிக்கை தீவிரம்

கொழும்பு, ஒக். 28

அரிசியின் விலைக் கட்டுப்பாட்டை கடுமையாக அமுல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு முறைகேடான வர்த்தகர்களை இலக்கு வைத்து நாடளாவிய ரீதியில் சோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரிசி மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் திருத்தம் செய்யவில்லை என அதிகாரசபை கூறியுள்ளது.

அதன்படி இ வர்த்தமானி எண். 2278/02 மூலம் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைகள் இன்னும் நடைமுறையில் உள்ளன.

எனவே வியாபாரிகள் ஒரு கிலோ கீரி சம்பாவை ரூ.260 இற்கும், சம்பாவை ரூ.230 இற்கும் மேல் விற்பனை செய்ய அனுமதி இல்லை. நாட்டரிசி ரூ. 220 இற்கும், சிவப்பு அரிசி ரூ.210 இற்கும் விற்பனை செய்ய வேண்டும்.

எவ்வாறாயினும், அதிக விலைக்கு அரிசியை வியாபாரிகள் விற்பனை செய்வதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

1977 என்ற ஹொட்லைன் ஊடாக இத்தகைய வர்த்தகர்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்கள் பதிவு செய்யலாம் என குறிப்பிட்டுள்ளது.

விலைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறும் தனிநபர் வணிகம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 100,000 ரூபா முதல் 500,000 ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# எமக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்கும் என நம்பினோம்

## பொதுஜன பெரமுன எம்.பி. அதிருப்தி

கொழும்பு, ஒக். 28

**அமைச்சரவை மறுசீரமைப்பில் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்குமென எதிர்பார்த்திருந்தோம். ஆனால், ஜனாதிபதி இந்த விடயத்தில் கரிசனை செலுத்தவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு சில பதவிகள் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தோம்.

அரசாங்கத்தின் பிரதான ஒரு கட்சி என்ற ரீதியிலேயே நாம் அதனை எதிர்பார்த்திருந்தோம்.

கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுடன் கலந்துரையாடி அரசாங்கத்தின் பங்காளி கட்சித் தலைவர்களின் ஆதரவைப் பெற்று அரசாங்கத்தை முன்னோக்கி கொண்டுசெல்ல ஜனாதிபதி அறிந்திருக்கவேண்டும்.

ஆனால், அவ்வாறான கலந்துரையாடல்கள் எதுவும் நடைபெறவில்லை. இதனால் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அதிருப்தியில் உள்ளனர்.

எவ்வாறாயினும், பொதுத் தேர்தலோ அல்லது ஜனாதிபதித் தேர்தலோ அறிவிக்கப்படும் வரை, ஜனாதிபதிக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெறுவது குறித்து எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை. தேர்தல் வரும்போது கட்சியால் எடுக்கப்படும் தீர்மானங்கள் அறிவிக்கப்படும்-என்றார்.



(அ)

# காஸாவில் தங்கியிருக்கும் இலங்கையர்கள் ஆபத்தில்!

## ரஃபா நுழைவாயில் வழியாக செல்ல எகிப்து அனுமதி மறுப்பு

கொழும்பு, ஒக். 28

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் சிக்கியுள்ள இலங்கையர்களை விடுவிப்பதற்கான இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், எகிப்தின் ரஃபா எல்லைக்குள் குடியேற்றவாசிகள் நுழைய அந்நாடு அனுமதி மறுத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் காஸாவின் ஹமாஸ் இயக்கத்துக்கு இடையில் ஏற்பட்டுள்ள போரால் காஸா பகுதியில் வசித்து மற்றும் தொழில்புரிந்து வந்த பல இலங்கையர்கள் காஸாவைவிட்டு வெளியேற முடியாது தவித்து வருகின்றனர்.

காஸாவில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு முன்னதாக அறிவித்திருந்தது.

இந்நிலையில், இலங்கையர்களை எகிப்தின் ரஃபா எல்லையின் ஊடாக எகிப்துக்கு அழைத்துச் செல்லும் இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பலஸ்தீனத்துக்கான இலங்கையின் தூதுவர் பேர்னாட் கூரே தெரிவித்துள்ளார்.

இலங்கையர்களின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கம் அவர்களுக்கு தண்ணீர் மற்றும் உணவை வழங்கி வருகிறது. ஆனால் இலங்கையர்கள் உணவு மற்றும் தண்ணீரைக் கேட்கவில்லை. விரைவில் தம்மை எகிப்துக்கு அழைத்து செல்லுமாறே கோருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

# முறைகேடாக சட்டக்கல்லூரி பரீட்சை எழுதினார் பாராளுமன்ற உறுப்பினர்

## பிரபல அரசியல்வாதிக்கும் தொடர்பு

கொழும்பு, ஒக். 28

அகில இலங்கை சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது தென் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடைத்தாள்களை மறைத்து வைத்து விடைகளை எழுதியதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டக்கல்லூரி நுழைவுத் தேர்வு கடுமையான நிபந்தனைகளின் கீழ் தேர்வுத் துறையால் நடத்தப்படுகிறது.

அதன்படி, சட்டங்கள் தொடர்பிலான பாடப் புத்தகங்களை அருகில் அடுக்கி வைத்து பரீட்சைக்கான பதில்களை எழுதியதாக தகவல் வெளியானதை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், குறித்த பாராளுமன்ற உறுப்பினர் உயர்மட்ட அரசியல்வாதிகளின் உதவியின் மூலம் இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை தவிர்க்க கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு தொடர்புள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(அ)

# உலக நாடுகள் இலங்கை மீது கடும் அதிருப்தியில் உள்ளன!

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஒக். 28

உலக நாடுகள் இலங்கைமீது கடும் அதிருப்தியில் இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் திட்டத்தின் கீழ்,39 ஆவது கட்டமாக அத்தனகல்ல உந்துகொட அறபா கல்லூரிக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கான உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் இராஜதந்திர முன்னெடுப்புகள் பலவீனமானது. வெளிநாட்டு பயணங்களின்போது அரச பிரதிநிதிகள் வெவ்வேறான கருத்துகளை கூறிவருவதால் பல நாடுகள் இலங்கைமீது அதிருப்தியில் உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியை நிர்வகிப்பதுபோல நாட்டின் வெளியுறவுக் கொள்கையை நிர்வகிக்க முடியாது.

சீனக் கப்பல் தொடர்பில் கூட தற்போதைய அரசு பல்வேறு கதைகளைக் கூறிவந்தது. வரவிடமாட்டோம் என இந்தியாவிடம் கூறிவிட்டு, மறுபக்கம் சீனாவிடம் வாருங்கள் என கூறியுள்ளனர்.

இவ்வாறு நொடிக்கு நொடி மாறி மாறி கதைப்பதால் முக்கியமான பல சர்வதேச நாடுகள் இலங்கைமீது சீற்றத்தில் உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொய் சொல்வதுபோல சர்வதேச சமூகத்திடம் பொய்யுரைக்க முடியாது. சீன கப்பல் விவகாரத்தை முழுவதுமாக குழப்பியதற்காக பல நாடுகள் நம் மீது கோபத்தில் உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியால் முடியாது போனாலும், ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கைகளைக் கொண்டுள்ளது.

எனவே, நாட்டில் தற்போது ஆட்சியிலுள்ள பலவீனமான அரசின் செயற்பாடுகள் காரணமாக இலங்கை மக்கள் மீதும், இலங்கைமீதும் கோபம் கொள்ள வேண்டாம் என சர்வதேசத்திடம் கோரிக்கை விடுக்கின்றேன் -என்றார்.

(அ)

# ரணில் ஜனாதிபதியாகி 14 மாதங்களில் 414 வீதத்தினால் மின் கட்டணம் உயர்வு

கொழும்பு, ஒக். 28

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று 14 மாதங்களில் 414 வீதத்தால் மின்சார கட்டணம் அதிகரித்துள்ளதாக அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மின்கட்டண உயர்வு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் தற்போது கடும் வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 20,000 ரூபாவினால் சம்பளத்தை அதிகரிக்குமாறு அனைத்து ஊழியர்களுக்கும் அழுத்தம் கொடுத்து எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதி பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அருகில் வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.



எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுகூடி இவ்விடயம் தொடர்பில் விசேட கலந்துரையாடலை நடத்தவுள்ளனர்.

20,000 ரூபா சம்பள அதிகரிப்பு செய்யப்படாவிட்டால் நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன-என்றார்.

(அ)

# துறைமுக நகர ஒப்பந்தம் குறித்து சட்டமா அதிபரின் கருத்தை மிகவிரைவில் தெரிவிக்குமாறு பரிந்துரை

கொழும்பு, ஒக். 28

கொழும்பு துறைமுக நகரத்தில் செயற்படும் வர்த்தக நிறுவனங்களின் ஒப்பந்தம் தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தை நான்கு வாரங்களுக்குள் வழங்குமாறு அரச நிதி தொடர்பான குழு பரிந்துரைத்துள்ளது.

அரச நிதி தொடர்பான குழு அதன் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் கூடியபோது இந்த பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கு அரச நிதி தொடர்பான குழு ஒப்புதல் அளித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் செயற்படும் 10 வர்த்தக நிறுவனங்கள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அவற்றின் ஒப்பந்தங்கள் தொடர்பான பிரச்னைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் எந்த சட்ட அடிப்படையிலும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரியவந்தது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பான சட்டமா அதிபரின் கருத்தை 4 வாரங்களுக்குள் அரச நிதி தொடர்பான குழுவுக்கு தெரிவிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(அ)

# மட்டக்களப்பு பௌத்த மயானத்தில் கழிவுகள் வீசிய ஒப்பந்தகாரர் கைது!

மட்டக்களப்பு, ஒக். 28

**மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுர சிங்கள மயானத்துக்குள் சட்டவிரோதமாக கழிவுப் பொருட்களைக் கொட்டிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப் பட்ட ஒப்பந்தகாரர் ஒருவரை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.**

ஜெயந்திபுரத்தைச் சேர்ந்த பௌத்த மயானத்தினுள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அந்த பகுதி வீதி நிர்மாண பணிகளைச் செய்துவந்த ஒப்பந்தகாரர் வீதியை அகழ்ந்த மணல், கற்பாறைகளை கனரக வாகனத்தில் கொண்டுச் சென்று சட்டவிரோதமாக கொட்டியுள்ளார்.

இதனையடுத்து, இது தொடர்பாக ஜெயந்திபுர விகாரை விகாராதிபதி பொலிஸ் நிலையத்தில் கடந்த 3 தினங்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்திருந்த நிலையில், பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்து மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கடந்த புதன் கிழமை சென்று மீண்டும் முறைப்பாடு செய்தார்.

இதனை தொடர்ந்து, அவர் குறித்த மயானப் பகுதிக்கு சென்று பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் ஆட்கள் செய்த கொடூரமான வேலை எனத் தெரிவித்து தென்பகுதியில் உள்ள தமிழர்களின் தலையை வெட்டப் போவதாக வீதியில் சத்தமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதனை தொடர்ந்து சட்டவிரோதமாக மயானத்தில் கற்பாறைகள் மணல்களை கொட்டிய வீதி அபிவிருத்தி ஒப்பந்தகாராரை கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 30 ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(அ)

## அம்பாறை மாவட்ட பெண்கள் வலுவூட்டல் கற்கைநெறியின் சான்றிதழ் வழங்கும்விழா!



காரைதீவு, ஒக். 28

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு கடந்த மூன்று மாத காலமாக நடத்திய பெண்கள் வலுவூட்டல் சார்ந்த சான்றிதழ் கற்கைநெறி யின் சான்றிதழ் வழங் கும் விழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் மற்றும் கௌரவ அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் டி.ஜே .அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார்.

மேலும், கௌரவ அதிதிகளாகவும், வளவாளர்களாகவும்மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏசிஏ. அசீஸ் ,உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, மாவட்ட இணைப்பாளர் இர்பான், உளவளத்துறை உத்தியோகத்தர் ரி.சுதர்சன், இணைப்பாளர் மொகமட் ஷா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

பயிற்சிநெறியை மேற்கொண்ட 40 மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(அ)

## மட்டக்களப்பு திவுலுப்பொத்தானையிலிருந்து சிங்கள மக்களை வெளியேற்றுவதற்கு முயற்சி

### மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சுமணரத்ன தேரர் கடிதம்

மட்டக்களப்பு, ஒக். 28

மட்டக்களப்பின் திவுலுப் பொத்தானையிலிருந்து மக்களை வெளியேற்ற முயற்சிகள் இடம் பெறுவதாக தெரிவித்துள்ள அம்பிட்டியே சுமணரத்ன தேரர், அந்த மக்களை பாதுகாப்பதற்காக இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடியாக தலையிடவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்பித்துள்ள நான்கு பக்க கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் எட்டப்பட்டுள்ள உடன்படிக்கை காரணமாக விக்கிரமசிங்க-ராஜபக்ச அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திவுலுபொத்தானையிலும் அதனை சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள மக்களை அச்சுறுத்துவதற்கு அனுமதித்துள்ளது என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைமைத்துவத்தின் சார்பில் மகாவலி அதிகாரிகளும் பொலிஸாரும் கிழக்கு மாகாணத்திலிருந்து சிங்களவர்களை வெளியேற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏனையவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் எனவும் மனித உரிமை குழுவிற்கான கடிதத்தில் தேரர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் கிழக்கு மாகாண ஆளுநரும் முக்கியமானவர்கள் என தேரர் தெரிவித்துள்ளார். (அ)

# முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் 3ஆவது மாநாடு காத்தான்குடியில்



மட்டக்களப்பு, ஒக். 28

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப்பின் "முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் மூன்றாவது தேசிய மாநாடு - 2023" "குடும்பம் எங்கள் விழி ஆற்றல் எங்கள் வழி" எனும் தொனிப்பொருளில் காத்தான்குடி சீஐஜி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

சிறீலங்கா பென் கிளப்பின் ஸ்தாபகத் தலைவி சம்மாந்துறை மஷூறா தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில், இலங்கையின் பல பாகங்களிலுமிருந்தும் அறுபதுக்கு மேற்பட்ட பெண் எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பேராதனை வளாக மெய்யியல்துறை ஓய்வு நிலைத் தலைவரும் பேராசிரியருமான எம்.எஸ்.எம்.அனஸ் மற்றும் காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்கா ஷபீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மூன்று அமர்வுகளாக இடம் பெற்ற இவ்விழாவில், முதல் அமர்வு பெண்களுக்காக மட்டும் இடம்பெற்றது.

இரண்டாம் அமர்வில் இருபத்திரெண்டு முஸ்லிம் பெண்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக் கவிதைகள் அடங்கிய "இமயம் தழுவும் இறக்கைகள்" கவிதைத் தொகுதி வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கவிதை, சிறுகதை மற்றும் ரமழான் மாதப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது.

மூன்றாவது அமர்வில் சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் நெறியாளர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பெரும் விழாவில், கல்விமான்கள், கலைஞர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(அ)

# கிழக்கு தொழில் நிறுவனங்கள் பற்றிய ஆய்வு நூல் வெளியீடு!

அம்பாறை, ஒக். 28

தென்கிழக்கு பல்கலைகழகம் ஆரம்பிக்கப்பட்டு 27 வருட பூர்த்தியையும் ஸ்தாபகர் தினத்தையும் முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி மரநடுகை நிகழ்வுடன் ஆரம்பமான நிகழ்வுகளில் ஓர் அங்கமாக பேராசிரியர் ஏ.எல் அப்துல் றவூப் எழுதிய "இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பற்றிய ஆய்வு நூல்" பல்கலைக்கழக வணிக மையத்தின் ஏற்பாட்டில் 25 ஆம் திகதி தொழில்நுட்ப பீட கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் பிரதிநிதியாக ஆளுநரின் செயலாளர் சிரேஷ்ட சிவில் நிர்வாக சேவை அதிகாரி எல்.பி. மதநாயக்க கலந்து கொண்டார்.

பேராசிரியர் ஏ.எல் அப்துல் றவூப்பின் வரவேற்புரையை தொடர்ந்து நூல் விமர்சன உரையை பேராசிரியர் எம்.பி.எம். இஸ்மாயிலும் பல்கலைக்கழக வணிக மையம் தொடர்பில் கலாநிதி எம்.என்.ஏ. ஹினாஸூம் நிகழ்த்தினர்.

நிகழ்வுக்கு விசேட பேச்சாளராகவும் விசேட அதிதியாகவும் பேராசிரியர் துசித அபேதுங்க கலந்துகொண்டு உரையாற்றினார்.



தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு நூலின் முதல் பிரதியை பெற்றுக்கொண்ட அதேவேளை நூலின் பிரதிகளை அதிதிகளுக்கும் கௌரவமாக அழைக்கப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டதுடன் ஜி.எஸ்.லாணி மௌஸ்டீன் நன்றியுரை நிகழ்த்தினார்.

(அ)



நிலாவெளி ஆயுள்வேத மாவட்ட சித்த வைத்தியசாலையில் வாணி விழா சிறப்பு நிகழ்வுகள் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது. இவ் விழாவில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# காஸாவில் உடனடியாக போர்நிறுத்தம் அவசியம்

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

லண்டன், ஒக். 28

**பேரழிவுக்கு மத்தியில் காஸாவில் பெருகிவரும் இறப்பு எண்ணிக்கையை நிறுத்துமாறு பிரித்தானியாவைத் தளமாக கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.**

மேலும் முக்கியமான உதவிகள் காசாவை அடைவதை உறுதி செய்ய, உடனடி போர்நிறுத்தம் அவசியம் என்றும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

போர்க்குற்றங்கள் உட்பட சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள், மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினராலும் முன்னெடுக்கப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

இஸ்ரேலிய தரைவழித் தாக்குதல் காசா மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என்பதனால் உடனடி போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்குமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்தியுள்ளது.

காசா மீதான 16 ஆண்டுகால முற்றுகையை முடிவுக்கு கொண்டுவரவும், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாக விடுவிக்கவும் அழைப்பு விடுத்துள்ளது.

(அ)

# சீனாவின் முன்னாள் பிரதமர் காலமானார்



பீஜிங், ஒக். 28

சீனாவின் முன்னாள் பிரதமர் லீ கெகியாங் தமது 68 ஆவது வயதில் காலமானதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டு அவர் ஓய்வு பெறும் வரை ஆளும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் இரண்டாவது அதிகார மிக்க நபராக செயற்பட்டிருந்தார்.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் அவர் காலமானதாக சீன ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீன ஜனாதிபதி, சீ ஜின்பிங்கின் விசுவாசக் குழுவில் இணையாத ஒரே உயர் மட்ட தலைவராக அவர் இருந்துள்ளார்.

பொருளாதாரக் கொள்கைகளின் நடைமுறைச் செயல்பாட்டிற்காக அவர் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்ததாக குறிப்பிடப்படுகின்றது.

செல்வ இடைவெளியைக் குறைப்பதிலும், மலிவு விலையில் வீடுகள் வழங்குவதிலும் கவனம் செலுத்திய அவர், வறிய மக்களுக்காக செயற்பட்ட தலைவராகவும் காணப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# காஸாவில் நிலத்துக்கு கீழ் காத்திருக்கும் பேராபத்து!

## இராணுவ நிபுணர்கள் எச்சரிகை



ஜெருசலேம், ஒக். 27

வான்பரப்பில் தனது அசுர வீரத்தை காட்டிய இஸ்ரேலுக்கு இனித்தான் பாரிய சவாலை எதிர்கொள்ள நேரிடும் என இராணுவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

காஸாவில் நிலத்துக்கு கீழ் ஹமாஸ் தீவிரவாதிகளால் அமைக்கப்பட்டுள்ள சுரங்கபாதைகள் பாரிய வலையமைப்பை கொண்டுள்ளது.

அவர்களின் ஏவுகணைகள் மற்றும் ஆயுத தளபாடங்கள் மற்றும் வெளியுலக தொடர்பு கொள்ளும் தொழிற்நுட்ப சாதனங்கள் அதைவிட சுமார் 40,000 பேர் தங்கக்கூடிய வசதிகள் மற்றும் உரிய நேரத்தில் அங்கிருந்து வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்லும் வசதிகள் என ஹமாஸின் இந்த கட்டமைப்பை உடைத்துக்கொண்டு முன்னேறுவது என்பது இலகுவானதல்ல.

மேலும் சுமார் 500 கிலோ மீற்றர் உள்ளமைப்பை கொண்ட இந்த சுரங்கப்பாதைகள் ஹமாஸ் காசாவை தனது ஆளுகைக்குள் கொண்டுவந்த நாளில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் கட்டுமானப்பணிகளுக்காக இஸ்ரேல் வழங்கிய கட்டுமான பொருட்களை வைத்தே இந்த பாரிய சுரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உதாரணத்துக்கு பிரான்ஸில் நிலத்துக்குக் கீழ் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் பாதை போல உட்கட்டமைப்பு இருப்பதாக தெரியவருகின்றது.

மேற்படி சுரங்கப்பாதைக்குள் உள்ளிடுவதற்கு சிறப்பு பயிற்சியளிக்கப்பட்ட இஸ்ரேலின் மோப்பநாய்களை கொண்டு இலக்குகளை கண்டறிய இஸ்ரேல் தனது சக்தியை பயன்படுத்தும் என்பதோடு சுரங்கப்பாதைக்குள் உள்ளிட கூடிய இலகுரக யுத்த டாங்கிகளில் குண்டுகள் பொருத்தி தாக்கும் வல்லமை இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# சிரியாவிலுள்ள ஈரான், ஆதரவுக் குழுக்களை இலக்கு வைத்து அமெரிக்கா வான் தாக்குதல்



டமஸ்கஸ், ஒக். 28

சிரியாவில் அமைந்துள்ள ஈரானின் புரட்சிகர காவல்படை மற்றும் ஈரானின் பின்னணியில் இயங்கும் குழுக்களால் பயன்படுத்தப்படும் ஆயுதக் கிடங்கு மற்றும் வெடிமருந்து கிடங்கு ஆகியவற்றை இலங்கு வைத்து அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

தாக்குதல்களில் ஈரானிய பிரஜைகள் கொல்லப்பட்டார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு எவ்-16 போர் விமானங்கள் துல்லியமான வெடிமருந்துகளைப் பயன்படுத்தி உள்ளூர் நேரப்படி அதிகாலை 4:30 மணியளவில் ஈராக் எல்லைக்கு அருகில் உள்ள அபுகமல் அருகே தாக்குதல்களை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் முன்னதாக ஒரு அறிக்கையில், "குறுகிய முறையில் வடிவமைக்கப்பட்ட தாக்குதல்கள்" இஸ்ரேல்-ஹமாஸ் போரிலிருந்து "தனி மற்றும் வேறுபட்டவை" என்று கூறினார்.

"இந்த துல்லியமான தற்காப்புத் தாக்குதல்கள், ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்கப் பணியாளர்களுக்கு எதிராக ஒக்டோபர் 17 ஆம் திகதி தொடங்கிய ஈரானிய ஆதரவு போராளிக் குழுக்களின் தொடர்ச்சியான மற்றும் பெரும்பாலும் தோல்வியுற்ற தாக்குதல்களுக்கு விடையிறுப்பாகும்" என்று அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் அதன் படைகள் மீதான தாக்குதல்களுக்கு வாஷிங்டன் பதிலடி கொடுக்கும் என்று வெள்ளை மாளிகையின் எச்சரிக்கையை தொடர்ந்து இந்த தாக்குதல்கள் ஈரான் ஆதரவு குழுக்கள் மீது குற்றம் சாட்டியுள்ளன.

"அமெரிக்கப் படைகளுக்கு எதிரான ஈரானிய ஆதரவு தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை மற்றும் நிறுத்தப்பட வேண்டும்" என்று ஒஸ்டின் கூறினார்.

மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கப் பணியாளர்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதற்கு எதிராக தெஹ்ரானை எச்சரித்து ஈரானிய உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு பிடென் ஒரு அரிய செய்தியை அனுப்பியுள்ளார் என்று வெள்ளை மாளிகை வியாழக்கிழமை முன்னதாக கூறியது.

"நாங்கள் விரும்புவது என்ன வென்றால், ஈரான் மிகவும் குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், அதன் போராளிகள் மற்றும் பினாமிகளை கீழே நிற்க வைக்க வேண்டும்" என்று மூத்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி கூறினார். இஸ்ரேலுடன் வான்வழித் தாக்குதல்களை அமெரிக்கா ஒருங்கிணைக்கவில்லை என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

ஈரானின் புரட்சிகர காவலர்கள் பயன்படுத்திய இரண்டு தளங்கள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் உத்தரவிட்டார் என்றும் அதை ஆதரிக்கும் போராளிகள், ஈரானின் பினாமிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தால் அமெரிக்கா கூடுதல் நடவடிக்கைகளை எடுக்கும் என்று பென்டகன் எச்சரித்தது.

கடந்த வாரத்தில் ஈராக்கிலும் சிரியாவிலும் அமெரிக்கா மற்றும் கூட்டணிப் படைகள் குறைந்தது 19 முறை ஈரான் ஆதரவுப் படைகளால் தாக்கப்பட்டுள்ளன. ஹமாஸ், இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா அனைத்தும் தெஹ்ரானால் ஆதரிக்கப்படுகின்றன.

(அ)

# இனவாதம் கக்கும் சுமன தேரரை உடனே கைது செய்யவேண்டும்!

## மனோ கணேசன் வலியுறுத்து



**கொழும்பு, ஒக். 28**

**‘தமிழர்களை வெட்டுவேன்’ என கூச்சலிடும் மட்டக்களப்பு, அம்பிட்டிய சுமனரத்ன தேரர் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.**

அம்பிட்டிய சுமனரத்ன தேரரின் இனவாதக் கூச்சல் மற்றும் கேவலமான நடத்தை என்பவற்றையும் மனோ கணேசன் கண்டித்துள்ளார்.

“அம்பிட்டிய சுமனரத்ன தேரர் மீண்டுமொருமுறை இனவாதம் கக்கியுள்ளார். இதற்கு இனியும் இடமளிக்ககூடாது. நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும். நடு வீதியில் இறங்கி, தமிழர்களை வெட்டிக்கொல்வேன் எனக் கூறும் அந்த தேரருக்கு மனநோயா? அவர் கைது செய்யப்பட வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதை கவனத்தில் எடுக்க வேண்டும். மாறாக வழமைபோல் கடந்துவிடக்கூடாது. மகாநாயக்க தேரர்களும் இந்த தேரரை ஒழுங்குப்படுத்த வேண்டும்.” -எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# புதிய சுகாதார அமைச்சருடன் நிதியமைச்சு அதிகாரிகள் பேச்சு

கொழும்பு, ஒக். 28

புதிய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கும், நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதுவரை செலுத்தப்படாதுள்ள மருந்துகளுக்கான கட்டணங்களைச் செலுத்துவது தொடர்பில் இதன்போது, கவனம் செலுத்தப்பட்டதாக நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோரும் பங்கேற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக பல்வேறு விநியோகத்தர்களுக்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை, விசேட அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்ய இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த வாரம் சமர்ப்பிக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதன்படி ஒரு மாதத்திற்கும் அதிக காலம் நிலுவையிலுள்ள கட்டணங்களை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருந்துகளை கொள்வனவு செய்தல் மற்றும் நிலுவையில் உள்ள கட்டணங்களை செலுத்துதல் போன்ற அத்தியாவசிய சுகாதார செலவுகளுக்கு எவ்வித தாமதமும் இன்றி நிதி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதன்போது குறிப்பிட்டார். (அ)

# கெஹலியவுடன் சேர்ந்து மோசடி!

## அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை தேவை என்கிறார் காவிந்த ஜயவர்தன

கொழும்பு, ஒக். 28

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுடன் இணைந்து ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக தற்போதைய அமைச்சர் ரமேஷ் பத்திரன சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக எம்மால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், அன்று அதில் நாம் குறிப்பிட்ட காரணிகள் உண்மை என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. அது மாத்திரம் போதாது. எம்மால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அமைச்சர் மாற்றப்பட்டுள்ள போதிலும், அவருடன் இணைந்து ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் எவரும் மாற்றப்படவில்லை. இவர்களுக்கு எதிராக எவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று தற்போதைய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் கேள்வியெழுப்புகின்றோம். அப்பாவி மக்களின் வரிப்பணமே இவர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் 65 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இவை தொடர்பில் தற்போதைய சுகாதார அமைச்சர் அவதானம் செலுத்தவேண்டும்- என்றார். (அ)

# ஹரக் கட்டா, குடு சலிந்துவை மீட்க 100 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தமாம்!

## நடவடிக்கைக்கு ’செய் அல்லது செத்து மடி’ என பெயரும் வைப்பு

கொழும்பு, ஒக். 28

குற்றப் புலனாய்வு திணைக்களத்திலிருந்து நிழல் உலக தாதாக்களான ‘ஹரக்கட்டா’ மற்றும் ‘குடு சலிந்து’ ஆகியோரை மீட்பதற்கான திட்டத்துக்கு ’செய் அல்லது செத்து மடி’ (Do or Die) என குறித்த பெயர் சூட்டப்பட்டிருந்தது என தெரியவந்துள்ளது.

100 கோடி ரூபா ஒப்பந்தமொன்றின் அடிப்படையிலேயே இதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ‘ஹரக்கட்டா’, ‘குடுசலிந்து’ ஆகியோரை மீட்பதற்காக குற்ற புலனாய்வு திணைக்களம்மீது ‘கொரில்லா’ தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது என வெளியாகியுள்ள தகவல் இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான தாக்குதல் திட்டத்தை வகுத்த முன்னாள் இராணுவ கொமாண்டோக்கள் இருவர் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டு, அவர்களின் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி இரு சந்தேக நபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடத்துக்குள் நுழைந்து ‘இரசாயன’ தாக்குதலை நடத்தி அவர்களை மீட்டுசெல்ல திட்டமிடப்பட்டிருந்தது எனவும், இராணுவ கொமாண்டோ உடையில் சி.ஐ.டிக்குள் நுழைந்தே தாக்குதல் நடத்தப்படவிருந்தது எனவும் இவர்கள் கூறியுள்ளனர் தெரியவருகின்றது.

சிஐடி வளாகத்தில் உள்ள பாதுகாப்பு தரப்புகள்மீதும் தாக்குதல் நடத்திவிட்டு, ‘ஹரக்கட்டா’, ‘குடு சலிந்து’ ஆகிய இருவருக்கும் இராணுவ கொமாண்டோ ஆடை அணிவித்துவிட்டே அவர்களை மீட்டு செல்ல வியூகம் வகுக்கப்பட்டுள்ளது எனவும், இதற்காக கொமாண்டோ பயிற்சி பெற்றவர்களை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் சி.ஐ.டியினர் கொழும்பு கோட்டை நீதிமன்றத்துக்கு கடந்த 24 ஆம் திகதி தெரியப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோட்டை நீதவான் திலிக கமகே, சி.ஐ.டியினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் கொமாண்டோக்களிடம் விரிவான விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது. மேலும் பல தகவல்களும் வெளிவந்துள்ளன.

தாக்குதலின்போது தாம் உயிரிழந்தால் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்பது உட்பட மேலும் சில இணக்கப்பாடுகளை குற்றச்செயலில் ஈடுபடவிருந்தவர்கள், ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்படுத்திக்கொண்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

நவீன தொலைதொடர்பு சாதனம் ஊடாக வெளிநாட்டில் உள்ள குற்றவாளிகளுடனும் கதைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சி.ஐ.டி திணைக்களத்துக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# முல்லைத்தீவு செயலகத்தில் இரு நாள் புத்தகக் கண்காட்சி

முல்லைத்தீவு, ஒக். 28

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புத்தக் கண்காட்சி நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கண்காட்சி ஆரம்பமானது.

இப் புத்தகக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் பங்கேற்று புத்தகங்களை பார்வையிட்டதுடன் விற்பனைக்காக வைக்கப்பட்ட புத்தகங்களையும் வாங்கிச் சென்றனர்.

புத்தகக் கண்காட்சியில் பங்குபற்றிய 50 பாடசாலை நூலகங்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இக் கண்காட்சியானது நேற்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட உள்ளக கணக்காய்வாளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்டச் செயலாளர், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



ஈழநாடு



## கிழக்கு மாகாணத்தில்...

- திவுலபத்தன பகுதியில் யுத்தத்திற்கு முன்னர் வசித்த மக்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் மீண்டும் அங்கு படிப்படியாக குடியமர ஆரம்பித்துள்ளனர். அம்மக்கள் விவசாயிகள் மற்றும் கால்நடை விவசாயிகள் என இரு குழுக்களாக இருப்பதால் அப்பகுதி மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது.

மயிலத்தமடு பகுதியில் மீளக் குடியமரும்போது, பொலன்னறுவை மற்றும் அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பலரை மேலதிகமாக அழைத்து வந்துள்ளமையினால் அவர்களின் விவசாயச் செயற்பாடுகளைப் பாதுகாக்கும் வகையில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருப்போருக்கு தற்காலிக ஊக்குவிப்பு தொகையொன்றை வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், அம்பாறை மற்றும் பொலன்னறுவை பகுதிகளிலிருந்து வந்தவர்களை அம்மாவட்டங்களிலேயே விரைவில் குடிமயர்த்துவது குறித்தும் ஆராயப்படுகிறது.

அதேபோல், மயிலத்தமடு - திவுலபத்தன பகுதியில் யுத்தத்திற்கு முன்னர் வசித்த மக்கள் அவர்களுக்குச் சொந்தமான காணிகளில் மீள் குடியமர்த்தப்பட வேண்டியது கட்டாயமானது என ஜனாதிபதி வலியுறுத்தியிருக்கும் நிலையில், மகாவலி அமைச்சு அப்பணியை சட்டரீதியாக முன்னெடுத்து வருகின்றது.

அதேநேரம் அனுமதியின்றி அரச காணிகளில் வசிப்பவர்களின் காணிகளைக் கையகப்படுத்தி, அவர்களை அக்காணிகளில் சட்டரீதியாக குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம். அரச காணிகளில் அனுமதியின்றி வசிப்பவர்கள் விண்ணப்பங்களைச் சமர்பித்து தமது இருப்பை சட்டரீதியாக்கிக் கொள்ள முடியும்.

அதேநேரம் மகாவலி வேலைத்திட்டத்திற்காக கிழக்கின் கோரளைப்பற்று பகுதியிலிருந்து தமிழர்களும், நாவலடி பகுதியிலிருந்து முஸ்லிம்களும் அகற்றப்பட்டிருந்த நிலையில் இந்த பணிகள் இன, மத அடிப்படையில் அல்லாது சட்டரீதியாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவகர்களிடத்திலிருக்கும் தரவுகளை அடிப்படையாக கொண்டே காணிகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக சிங்கள மக்களின் குடியிருப்புகள் மற்றும் அங்கிருந்து அகற்றப்படுகின்றது என்ற வகையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அறிக்கைகளும் பொலிஸாரினால் நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.

அதனால் மேற்படி முன்னெடுப்புகளின் போது சகல இனத்தவர்களுக்கும் இலங்கையர் என்ற வகையிலேயே சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதோடு, அதுகுறித்து அநாவசியமாக கருத்துக்களை வெளிப்படுத்த மூன்றாம் தரப்பினர் முற்படக் கூடாது- என்றார்.

(அ)

## கூட்டமைப்பு பொலிஸ் அதிகாரம்...

ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன்றி, மாகாண சபைக் கிருந்த 37 அதிகாரங்கள் சாதாரணமாக நடைமுறைப்படுத்தியிருக்கலாம் என்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ். மாவட்டத்தின் சட்ட ஒழுங்கை மாவட்டத்தின் பொலிஸாரால் சரிவர மேற்கொள்ள முடியாதிருக்குமானால் அந்த பொறுப்பை எமக்கு தாருங்கள். அதை நிர்வகித்துக் காட்டுகின்றோம் எனக் கோரியிருந்தார்.

சிறீதரனின் இத்தகைய கூற்று ஒரு நகைப்புக்குரியதாகவே பார்க்க முடிகின்றது. ஏனெனில் வடக்கு மாகாண சபையின் அதிகாரத்தை அதுவும் மிகப்பெரும் பெரும்பான்மையுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் தான் இன்று இவ்வாறு கோரும் கூட்டமைப்பினர்.

சாதாரணமாக நடைமுறைப்படுத்தக் கூடிய அதுவும் சட்ட ஒழுங்கு என்ற ஒன்றையும் உள்ளடக்கிய 37 அதிகாரங்களை கொண்டிருந்தும் அதனை இந்த கூட்டமைப்பினர் நடைமுறைப்படுத்தவில்லை.

அத்துடன் அன்று இந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கக் கூடிய பேரம் பேசும் பலம் இருந்தும் அவர்கள் அதனை விரும்பியிருக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

மைத்திரியின் நல்லாட்சி அரசில் கொள்கை வகுப்பாளர்களாகவும் உத்தியோகப்பற்றற்ற அமைச்சர்களுக்கு நிகரான அதிகாரங்களை கொண்டவர்களாகவும் இவர்கள் வலம் வந்தனர்.

தமிழ் மக்களின் நலன் அல்லது அரசியல் உரிமை பற்றி அக்கறை இருப்பின் அன்றே அன்றைய மைத்திரி அரசாங்கத்துடன் பேரம்பேசி நிபந்தனைகளை விதித்தாவது மாகாணத்துக்கு உரிய அதிகாரங்களை பெற்றிருக்க முடியும். ஏனெனில் இவர்களுடைய ஆதரவில்லாமல் ஆட்சியை தக்கவைக்க முடியாத நிலையில் மைத்திரி அரசு தங்கியிருந்தது.

அவ்வாறான சூழலில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட்ட பல்வேறு விடயங்களை மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்க முடியும். அதை விடுத்து அன்று மௌனமாக இருந்து விட்டு இன்று இவ்வாறு கோருவது மக்கள் நலன்சார்ந்தது அல்ல. அது ஒரு தன்னிலை விளம்பரமாகவே பார்க்கப்படுகின்றது.

ஆனால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மத்தியில் ஆட்சி அமைக்கக்கூடிய ஆசனங்களுக்கு மேலதிகமாகவே தனது பங்களிப்பை ஆட்சியாளர்களுக்கு வழங்கி மக்கள் நலன்சார் தேவைகளை மேற்கொண்டு வந்துகொண்டிருக்கின்றது - என்றார். (அ)

## துணுக்காயில்...

வேளையிலேயே மின்சாரம் தாக்கி குறித்த பூசகர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார தெரிவித்தனர்.

இராமநாதக்குருக்கள் ஸ்ரீஸ்கந்தராஜா குருக்கள் (வயது-69) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## ஜனாதிபதித்...

நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

“வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மதிப்பீட்டு அறிக்கைகளை திறைசேரி கோரும். அந்தவகையில் ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளாட்சிசபைத் தேர்தல்களுக்கான செலவு மதிப்பீட்டு அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளோம்.” - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி தேர்தல்களை நடத்த தலா 10 பில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## புறக்கோட்டையில்...

6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின.

கொழும்பு புறக்கோட்டை 2ஆம் குறுக்கு தெருவில் உள்ள 8 மாடி கட்டடமொன்றில் அமைந்துள்ள ஆடை வர்த்தக நிலையமொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து நேற்று காலை 9.30 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தீயணைப்பு பிரிவு தெரிவிக்கின்றது.

கொழும்பு தீயணைப்பு பிரிவிற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து 7 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

குறித்த தீ விபத்தில் 15 பேர் காயமடைந்து தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்தவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்ன.

தீ விபத்தில் பல வர்த்தக நிலையங்கள் சேததடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆடை வர்த்தக நிலையத்தில் காலை சமய வழிபாட்டின் போது கற்பூரத்தின் ஊடாக தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## சுமண...

குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கான கடிதத்தில் ராஜ்குமார் ராஜீவ்காந் தெரிவித்துள்ளதாவது:

அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் எனும் மட்டக்களப்பில் வசிக்கும் நபர் ஒருவரின் நடவடிக்கைகள் குறித்து நான் உங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

இந்த நபர் தொடர்ச்சியாக இன வெறிப் போக்கினை மனோநிலையை வெளிப்படுத்தி வருகிறார். மேலும், அவர் சமூகங்கள் மத்தியில் மோதலை தூண்டும் விதத்தில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றார்.

அவர் பல தடவைகள் பொலிஸாருக்கு எதிராக வன்முறையான விதத்தில் நடந்துகொண்டுள்ள போதிலும் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அவர் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். அவ்வேளை கொழும்பில் உள்ள தமிழர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துவேன் என பகிரங்கமாக ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இது அச்சம் ஏற்படுத்தும் நடவடிக்கை. கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் பாதுகாப்புக்கான நேரடி அச்சுறுத்தல்.

அம்பிட்டிய சுமண ரத்னதேரருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (அ)

## அரசியல் வேறுபாடுகளை...

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெறுமனே செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடமாக மாத்திரமின்றி நாட்டுச் சம்பிரதாயங்களின் அடையாளமாகவும் விளங்கும் இந்த மண்டபத்தின் வரலாறு நீண்டுச் செல்கிறது. எமது நாட்டின் அரசியல் முன்னோடிகளான சீ.ஏ.லோரன்ஸ், ரிசட் மோகன், முத்துக்குமாரசாமி மற்றும் ஜேம்ஸ் டி அல்விஸ் உள்ளிட்ட அனைவரும் றோயல் கல்லூரியில் உருவானவர்கள். அதேபோல் ஆனந்த குமாரசுவாமி, அநாகரிக தர்மபால உள்ளிட்டவர்களும் இங்குதான் உருவாகினர். பொன்.அருணாச்சலம், பொன் இராமநாதன் மற்றும் ஜேம்ஸ் பீரிஸ் போன்றவர்களும் இந்த பாடசாலையிலேயே உருவாகினர்.

அதேபோல் சென்.செபஸ்தியன் பாடசாலையில் உருவானவர்களையும் மறந்து விடக்கூடாது. சேர்.ஜோன் கொத்தலாவல சென்.செபஸ்தியன் கல்லூரியில் கல்வியை ஆரம்பித்து அந்த கட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கும் வரையில் கல்வி கற்றார்.

ஜே.ஆர்.ஜயவர்தன இந்த பல்கலைக்கழகத்தை ஆரம்பித்த காலத்தில் இங்கு கல்வி பயின்றதாக கூறியுள்ளார். நாமும் இங்கிருந்து உருவாகியவர்கள் என்ற வகையில் அனைவரும் வெவ்வேறு துறைகளில் பல சேவைகளை ஆற்றியவர்களாகவும், ஆற்றி வருபவர்களாகவும் விளங்குகிறோம்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் றோயல் கல்லூரியினர் நாட்டுக்கான பணிகளை ஆற்றியுள்ளனர். இங்கு மாஷ் பூசகரை நினைவுகூற வேண்டும். அனைத்து அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலையின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்துள்ளனர். அவர்களில் சிலர் இன்றும் இங்கு உள்ளனர். டட்லி சில்வா மற்றும் போகொட பிரேமரத்ன ஆகியோரை நினைவுகூற வேண்டும்.

முதலாம் உலகப் போரில் உயிர் நீத்தவர்களின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட சின்னமொன்று இங்கு உள்ளது. அதில் 380 றோயல் கல்லூரியினரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களில் மேஜர் ஜெனரல் பெர்னாண்டோ மற்றும் பிரிகேடியர் ஜயதிலக்க போன்றவர்கள் நினைவிற்கு வருகின்றனர்.

அவர்கள் ஆனையிறவில் இருந்த வேளையில் அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவர்கள் பயந்தோடவில்லை. தம்மோடு இருந்தவர்களை முன்னால் அனுப்பிவிட்டு அவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரை நீத்தனர். அவர்களது கடமைகளைச் சரியாக செய்துள்ளனர். அதுவே றோயல் கல்லூரியினரின் பண்பாகும்.

நாம் என்றும் பயந்தோடவில்லை. நானும் பிரதமரும் இன்றும் இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்கிறோம். நாம் இருவரும் சகபாடிகள், எங்கள் இருவருக்கும் சொந்த வீடுகள் இல்லை. நான் தற்காலிக வீட்டிலேயே இருக்கிறேன். நாம் கடந்த காலத்தைப் பற்றி சிந்திப்பதற்கு மாறாக எதிர்காலத்தை பற்றி சிந்திக்கிறோம்.

நாம் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய அறிவியல் முறைமைகளுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அனைத்து துறைகளினதும் முன்னேற்றத்திற்கு எமக்கு புதிய முறைமைகள் அவசியப்படுகின்றன.

அதேபோல் புதிய பொருளாதாரம், அரசியல் முறைமைகளுடன் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அனைவரும் ஒன்றுபட்டு புதிய நாட்டை கட்டியெழுப்புவோம். பாராளுமன்றத்திலும் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவோம். கட்சி ஜனநாயக அரசியல் வேறுபாடுகளை அவ்வண்ணமே தக்கவைத்துக்கொண்டு அனைவரும் ஒன்றுபடுவோம் -என்றார்.

(அ)

## பட்ஜெட்டுக்கு...

கட்சி முடிவுகளை எடுத்தால் நாம் அறிவிப்போம். அமைச்சரவை மாற்றம் தொடர்பாக கட்சியின் செயலாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இன்று மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வழங்கும் திட்டத்தை பேசிய கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்பினர்கள்.

மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பினார்கள். மின்கட்டணத்தை உயர்த்திதான், மின்சார சபையை இலாபத்தில் இயங்க வைக்க வேண்டுமெனில், மின்சக்தி அமைச்சொன்றோ மின்சார சபையோ தேவையில்லை - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# சுமனரத்ன தேரர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்காதமை ஏன்?

## பொலிஸ்மா அதிபரிடம் சுமந்திரன் எம்.பி. கேள்வி

**யாழ்ப்பாணம், ஒக். 28**

**அம்பிட்டிய சுமனரத்ன தேரரால் அண்மையில் மட்டக்களப்பில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.**

வன்முறை மற்றும் இன, மத வெறுப்புணர்வைத் தூண்டும் அவரது கருத்து தண்டனைக்குரிய குற்றம் என்பதால் இது தொடர்பில் ஏன் பொலிஸார் நடவடிக்கை இதுவரை எடுக்கவில்லை என அவர் அதில் கேள்வியெழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனையும், தென்பகுதியில் வாழும் அனைத்துத் தமிழர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிடுவேன் என்று அந்த தேரர் வெளிப்படையாக கூறியுள்ளார்.



அவரது இந்த கருத்து 2007 ஆம் ஆண்டின் ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் 56 ஆம் பிரிவுன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

# சரணடைந்தவர்களின் பட்டியலை இராணுவம் ஒப்படைக்கவேண்டும்

## உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வலியுறுத்து

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

*கொழும்பு, ஒக். 28*

*2009 மே மாதம் 18 ஆம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு 58 ஆவது படைப்பிரிவுக்குக் கட்டளையிடவேண்டும் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வலியுறுத்தியுள்ளது.*

*இராணுவத்தின் 58 ஆம், 59 ஆம் மற்றும் 53 ஆம் படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் அது வலியுறுத்தியுள்ளது.*

*மேலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் தாம் சிரத்தையுடன் செயற்படுவதை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்றும் கூறியுள்ளது.*

*யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தினால் இது குறித்து அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.*

*அரசாங்கமானது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை உரியவாறு கையாள்வதாக பாசாங்கு காட்டுவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*விசாரணைகளை மேற்கொள்வதற்கென அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியையோ அல்லது ஆறுதலையோ பெற்றுத்தரவில்லை என்றும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் குறிப்பிட்டுள்ளது.*

# பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று கவனயீர்ப்பு!





*யாழ்ப்பாணம், ஒக். 28*

*யாழ்ப்பாணம் அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.*

*யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*நேற்று ஜும்மா தொழுகையை தொடர்ந்து பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து முஸ்லிம்கள் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*எதிரிகளால் அடக்கி ஒடுக்கப்படும் முஸ்லிம் சமுதாயத்தினருக்கு ஆதரவு தெரிவிக்கக் கோரி இடம்பெற்ற போராட்டத்தில் புத்திஜீவிகள், நலன்விரும்பிகள் மற்றும் உலமாக்கள் கலந்து கொண்டனர்.*

*(அ)*

# ஆசிரியர்கள் மீதான தாக்குதலை கண்டித்து யாழ்.நகரில் போராட்டம்









*யாழ்ப்பாணம், ஒக். 28*

*ஆசிரியர்களின் உரிமைகளை கோரிய போராட்டம் ஒன்று நேற்று யாழ்ப்பாணம் சென்ஸ்.சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.*

*கொழும்பில் ஆசிரியர்கள் மீது தண்ணீர் தாரைப் பிரயோகம் மற்றும் உரிமைகளை அடக்கும் அரசாங்கத்தின் செயல்பாடுகளை கண்டித்து இந்தப் போராட்டம் நேற்று பாடசாலை நிறைவடைந்ததன் பின்னர் முன்னெடுக்கப்பட்டது.*

*இதன்போது சுபோதினி அறிக்கையின்படி சம்பளத்தை அதிகரிக்கவேண்டும், ஆசிரியர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு அமைதியான முறையில் போராட்டம் நடத்தப்பட்டது.*

*இந்தப் போராட்டம் யாழ்ப்பாணத்தின் மேலும் சில பாடசாலைகளின் முன்பாகவும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

# யாழ். போதனா வைத்தியசாலையில் குருதி வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு

## இரத்த தானம் செய்யுமாறு கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஒக். 28*

*யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.*

*விபத்துக்கள், சத்திர சிகிச்சைகள், குருதிச்சோகை நோயாளர்கள், புற்றுநோயாளர்கள் மற்றும் குருதி தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வைத்தியசாலையில் அதிகரித்துச் செல்கின்றமையால் இரத்த வங்கியால் விநியோகிக்கப்படும் குருதியின் அளவும் கூடிக்கொண்டே செல்வதாக இரத்த வங்கியினர் தெரிவித்தனர்.*

*அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-*

*நோயாளர் அதிகரிப்புக்கு ஏற்ப குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. இதனால் இரத்த வங்கியில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாம் பல இடங்களுக்குச் சென்று குருதியை சேகரித்தாலும் குறிப்பிட்ட சில காலங்களில் குருதியின் கையிருப்பு குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.*

*எமது இரத்த வங்கியில் 330 பைந்த் குருதி குறையாமல் இருக்கவேண்டும். அனால் தற்போது இருக்கும் குருதியின் அளவு 238 பைந்த் ஆகும். இது ஆபத்தான நிலையாகும். இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை எம்மால் வழங்க முடியாமலுள்ளது. ஒரு அனர்த்தம் நிகழுமாயின் அதனால் ஏற்படும் குருதியிழப்பை ஈடுசெய்வதற்கு எம்மால் முடியாமல்போகலாம். ஆகவே இந்த நிலைமையை கவனத்தில் கொண்டு பொது மக்கள் இரத்ததானம் செய்வதற்கு முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்-என்றனர்.*

*(அ)*

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு





# நடப்பு சம்பியனை வீழ்த்திய இலங்கை

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நடப்பு சம்பிய னான இங்கிலாந்தை நேற்று முன் தினம் நடந்த போட்டி யில் இலங்கை அணி வீழ்த்தியது.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி புள்ளிப் பட்டிய லில் 5 ஆம் இடத்திற்கு முன்னேறியது.

பெங்களூரு சின்னசுவாமி மைதானத்தில் இந்த போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்களால் இலங்கை அணியின் அபார பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமற்போனது.

இங்கிலாந்தின் முதல் ஐந்து விக்கெட்களும் 85 ஓட் டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன. சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் அதிகபட்சமாக 43 ஓட்டங்களை பெற்றார்.

இங்கிலாந்து அணி 156 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் களையும் இழந்தது.

நீண்ட நாட்களின் பின்னர் இலங்கை அணியில் இடம் பெற்ற அஞ்சலோ மத்தியூஸ் 2 விக்கெட்களை வீழ்த்தி னார். லஹிரு குமார 3 விக்கெட்களையும் கசுன் ராஜித 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

வெற்றி இலக்கை இலங்கை அணி 25.4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு கடந்தது.

பெத்தும் நிஸங்க 77 ஓட்டங்களையும் சதீர சமரவிக் ரம 65 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்று வெற்றியை உறுதி செய்தனர்.

இந்த வெற்றியுடன் 4 புள்ளிகளுடன் இலங்கை அணி 5 ஆம் இடத்திற்கு முன்னேறியது.

புள்ளிப்பட்டியலில் இந்தியா, தென்னாபிரிக்கா, நியூ சிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் முதல் நான்கு இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தமது அடுத்த போட்டிகளில் ஆப்கானிஸ் தான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நியூஸிலாந்து ஆகிய அணிகளை எதிர்கொள்ளவுள்ளது.

இந்த வெற்றி மூலம் இலங்கை அணி அரை இறுதிக் கான எதிர்பார்ப்புகளை தக்கவைத்துள்ளமையும் குறிப்பி டத்தக்கது. (அ)

# “முட்டாள்தனமான யோசனை”





உலகக் கிண்ண கிரிக் கெட் போட்டிகள் நடந்துவரும் மைதா னங்களில் நிகழ்த்தப்ப டும் ‘லைட் ஷோ’ நிகழ்ச்சிக்கு அவுஸ்தி ரேலிய அணி வீரர் க்ளென் மக்ஸ்வெல் அதிருப்தி தெரிவித்துள் ளார்.

நெதர்லாந்துக்கு எதி ரான உலகக் கிண்ண ஆட்டத்தில் அவுஸ்தி ரேலியா 309 ஓட்டங் கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றிக்கு முக்கிய பங்காற்றியவர் களில் ஒருவர் அவுஸ்தி ரேலிய அணியின் கிளென் மக்ஸ்வெல். டெல்லி அருண் ஜெட்லீ மைதானத்தில் இந்தப் போட்டியில் நெதர்லாந்து பந்துவீச்சாளர்களை சிதறடித்த மக்ஸ்வெல் 40 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். உலகக் கிண்ண வரலாற்றில் அதிவேகமாக எடுக்கப்பட்ட சதம் இதுவாகும்.

இந்தப் போட்டியின் போது டெல்லி அருண் ஜெட்லீ மைதானத்தில் ‘லைட் ஷோ’ நிகழ்ச்சி நடத்தப்பட்டது. வீரர்கள் சதம் அடிக்கும்போதும், அணி வெற்றிபெறும் போது என முக்கிய கட்டங்களில் மைதானத்தில் வண்ண விளக்குகள் ஒளிர வைக்கப்பட்டன. இரண்டு நிமிட அந்த ‘லைட் ஷோ’வினால் மைதானமே முற்றிலுமாக வண்ணங்கள் நிறைந்ததாக காட்சியளித்தது. போட்டி களை நேரில் பார்க்க வரும் ரசிகர்களை கவர்வதற்காக நடப்பு உலகக் கோப்பை தொடரில் இந்த ‘லைட் ஷோ’ நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இந்த ஏற்பாட்டை க்ளென் மேக்ஸ்வெல் ‘மோசமான யோசனை’ என விமர்சித்துள்ளார். இதற் கான காரணங்களையும் கூறியுள்ள அவர், “பெர்த் ஸ்டே டியத்தில் நடந்த பிக் பாஷ் லீக்கின் போதும் இதுபோல் ‘லைட் ஷோ’ போடப்பட்டது. இந்த லைட் ஷோ நிகழ்த் தப்படும்போதெல்லாம் எனக்கு தலைவலி வருவதுபோல் உணர்கிறேன். இரண்டு நிமிடங்களுக்கு பின் எனது கண்களை சரிசெய்ய சிறிதுநேரம் ஆகிறது. இது விளை யாட்டை பாதிக்கிறது. எனவே, என்னால் முடிந்தவரை ‘லைட் ஷோ’ போடப்படும் அதனை தவிர்க்க முயல்கி றேன். ரசிகர்களை கவர இது சிறந்தது. ஆனால், கிரிக் கெட் வீரர்களை பொறுத்தவரை இது முட்டாள்தன மான யோசனை என்று நான் நினைக்கிறேன்” எனத் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார் மக்ஸ்வெல். (அ)




## இந்தியன் பிரிமியர் லீக் வீரர்கள் ஏலத்துக்கான திகதி அறிவிப்பு

2024ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் வீரர்களுக்கான ஏலம், டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வானது டுபாயில் நடத்தப்படவுள்ளதாக இந்தியன் பிரிமியர் லீக் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் வீரர்களுக்கான ஏலம் வெளிநாடு ஒன்றில் நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தநிலையில், விளையாடும் 10 அணிகளும், தக்க வைக்கும் மற்றும் விடுவிக்கும் வீரர்கள் தொடர்பான பட்டியலை நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரையில் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அணிக்கும் தலா 100 கோடி இந்திய ரூபா வழங்கப்படவுள்ளது.

கடந்த முறை ஒவ்வொரு அணிக்கும் தலா 95 கோடி இந்திய ரூபா வழங்கப்பட்டதுடன், இந்தமுறை அந்த தொகை 5 கோடி இந்திய ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள் ளது.

## “ஒரே இரவில் மோசமான அணியாக மாறிவிட்டோம்”



“ஒரே இரவில் மோசமான அணியாக மாறிவிட்டோம்” என இங்கிலாந்து அணித் தலைவர் ஜோஸ் பட்லர் தெரி வித்துள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் 25ஆவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை எளிதில் வீழ்த்தி இலங்கை நடப்பு தொடரில் இரண்டாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. அதேநேரம், நடப்பு சம்பியன் இங் கிலாந்து சந்திக்கும் நான்காவது தோல்வி இதுவாகும்.

இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொட ரில் நடப்பு சம்பியன் என்ற அந்தஸ்துடன் களம் கண் டது இங்கிலாந்து. இந்தத் தொடரில் ஏற்கனவே இங்கி லாந்து அணி 4 ஆட்டங்களில் விளையாடி ஒரு வெற்றி, 3 தோல்விகளுடன் புள்ளிகள் பட்டியலில் 9ஆவது இடத் தில் உள்ளது. நியூஸிலாந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக தோல்வியை தழுவிய இங்கிலாந்து, வங்கதேச அணிக்கு எதிராக மட்டும் வெற் றிபெற்றது. இன்றைய போட்டியிலும் இங்கிலாந்து மோசமாகவே விளையாட தற்போது மீண்டுமொரு தோல்வியை சந்தித்துள்ளது. போட்டிக்கு பின் பேசிய இங்கிலாந்து கேப்டன் ஜோஸ் பட்லர், “ஒரே இரவில் மோசமான அணியாக மாறிவிட்டோம்” எனத் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசுகையில்-

இது நம்ப முடியாத அளவுக்கு கடினமானது. எனி னும், இந்த தோல்விக்கு, அணியின் தலைவராக நான் மிகவும் வருந்துகிறேன். எங்களிடம் நிறைய அனுபவம் வாய்ந்த வீரர்கள் இருந்தும், எங்களால் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்த முடியாதது ஏமாற்றமளிக்கிறது. ஒரே இரவில் மோசமான அணியாக மாறிவிட்டோம். அதுதான் எங்களின் விரக்தி. இத்தொடரில் இதுவரை எங்களது சிறப்பை நாங்கள் வெளிப்படுத்தவில்லை. ஆட் டத்தில் நாங்கள் இதுபோன்ற தவறுகள் வெளிப்படுத்தி இதுவரை பார்த்ததில்லை. பேட்டிங் மற்றும் பவுலிங் என இரண்டிலும் சரியாக செயல்படவில்லை. மீதமுள்ள போட்டிகளில் நன்றாக விளையாட விரும்புகிறோம். எதுவாக இருந்தாலும் இருக்கும்.” என ஜோஸ் பட்லர் வேதனையுடன் கூறினார்.

# ஐ.நா. பொதுச்செயலாளரை மன்னிப்பு கேட்க வலியுறுத்தும் இஸ்ரேல்!









காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல் 20-வது நாளை எட்டியுள்ள நிலையில், பாலத்தீனம் குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் ஆந்தோனியோ குத்தேரஸ் தெரிவித்த கருத்து அவருக்கே எதிராக வந்து நிற்கிறது. அவரை பதவி விலகுமாறு இஸ்ரேல் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது. பிரிட்டனும் ஐ.நா. பொதுச் செயலாளரை கண்டித்துள்ளது. அப்படி அவர் என்ன சொன்னார்? என்ன நடந்தது?

**ஹமாஸுடன் இஸ்ரேலுக்கும் குத்தேரஸ் கண்டனம்**

இஸ்ரேல் - பாலத்தீன மோதல் தொடர்பாக செவ்வாய்க்கிழமை ஐ.நா மன்றத்தில் பொதுச்செயலாளர் ஆந்தோனியோ குத்தேரஸ் உரையாற்றினார்.

“காசாவில், சர்வதேச மனிதாபிமான சட்டம் தெளிவாக மீறப்படுவதை நாம் கண்டு வருகிறோம். இது குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். தெளிவாகச் சொல்கிறேன். ஆயுத மோதலில் ஈடுபடும் எந்தவொரு தரப்பினரும் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல.

ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு காரணம் இல்லாமல் இல்லை என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம். பாலத்தீன மக்கள் 56 ஆண்டுகளாக திக்குமுக்காடச் செய்யும் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியுள்ளனர். தங்கள் நிலம், குடியேற்றங்களால் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுவதையும், வன்முறையால் தொடர்ந்து பாதிக்கப்படுவதையும் பாலத்தீன மக்கள் பார்க்கின்றனர். அவர்களின் பொருளாதாரம் வளராமல் தடைபட்டுள்ளது. பாலத்தீன மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர், அவர்களின் வீடுகள் இடிக்கப்பட்டன.

தங்களின் அவலநிலைக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என்கிற பாலத்தீன மக்களின் நம்பிக்கை மறைந்து வருகிறது. ஆனால் பாலத்தீன மக்களின் மனக்குறைகள் ஹமாஸின் பயங்கரமான தாக்குதலை நியாயப்படுத்த முடியாது. மேலும் பாலத்தீன மக்களுக்கு கூட்டு தண்டனை தரும் திகைக்க வைக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது.” என்று அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய ஆந்தோனியோ குத்தேரஸ், மனிதாபிமான உதவிகளை பாதுகாப்பாக வழங்கிடவும், பணயக் கைதிகளை விடுவிக்கவும், மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக, போர் நிறுத்தத்திற்கான எனது கோரிக்கையை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துவதாகக் கூறினார்.

**இஸ்ரேல் தாக்குதலை நிறுத்த பாலத்தீனம் வலியுறுத்தல்**

இதேபோல ஐ.நா அவையில் உரை நிகழ்த்திய பாலத்தீன வெளியுறவு அமைச்சர் ரியாத் அல்-மாலிகி, “மனிதனால் சகித்துக்கொள்ள முடியாததைக் கூட காஸா மக்கள் சகித்துக் கொண்டிருக்கின்றனர் இந்த சித்திரவதைகள், கொலைகள் போதும். பாலத்தீன மக்களுக்கு எதிராக திட்டமிட்டு, காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தி வரும் இஸ்ரேல் உடனடியாக இதை நிறுத்த வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

மேலும் தொடர்ந்த அவர், ‘பாலஸ்தீன மக்கள் கொல்லப்படுவதை தடுக்கவும். அவர்களுக்கு எதிராக நடத்தப்படும் படுகொலைகளை நிறுத்தவும், ஆக்கிரமிப்பு சக்தியான இஸ்ரேல், அதன் சட்டவிரோத ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பாலத்தீன மக்களுக்கு எதிராக திட்டமிட்டு, காட்டுமிராண்டித்தனமாக நடத்தி வரும் படுகொலைகளை நிறுத்தவும் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்.

இஸ்ரேலை தடுக்கும் கடமை பாதுகாப்பு மன்றத்திற்கு உள்ளது. சர்வதேசச் சட்டத்தின் கீழ் அவர்களைத் தடுக்க சர்வதேச சமூகம் கடமைப்பட்டுள்ளது. அவர்களைத் தடுப்பது நமது கூட்டு மனிதக் கடமையாகும். அதேசமயம், இந்த விஷயத்தில் கவுன்சிலின் தோல்வியை மன்னிக்க முடியாது.” என்று கூறினார்.

**குத்தேரஸ் பதவி விலக இஸ்ரேல் வலியுறுத்தல்**

ஆந்தோனியோ குத்தேரஸின் பேச்சுக்கு இஸ்ரேல் கடுமையாக எதிர்வினையாற்றியது. எந்த உலகில் இருக்கிறீர்கள் என ஆவேசமாக பேசிய இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் எலி கோஹன், “ஹமாஸை ஒழித்துக்கட்டுவது இஸ்ரேலின் உரிமை மட்டுமல்ல. அது நம் கடமை” என்றார்.

‘இந்த படுகொலை ஐ.எஸ்.ஐ.எ.ஸ். யை விட கொடூரமானதாக வரலாற்றில் இடம்பிடிக்கும். ஹமாஸ்தான் புதிய நாஜிக்கள். நாகரிக உலகம் ஒன்றுபட்டு, நாஜிக்களை வீழ்த்தியது போல, நாகரிக உலகம் ஐ.எஸ்.ஐ.எ.ஸ்.யை தோற்கடிக்க ஒன்றுபட்டது போல, நாகரிக உலகம் ஹமாஸை வீழ்த்த இஸ்ரேலின் பின்னால் ஒன்றுபட வேண்டும்.

பொதுச்செயலாளர் அவர்களே, நீங்கள் எந்த உலகத்தில் இருக்கிறீகள். நிச்சயமாக இது நம் உலகம் அல்ல. அக்டோபர் 7ம் தேதி படுகொலைக்கு ஹமாஸ் தான் காரணம். ஹமாஸில் உள்ள கடைசி நபருக்கும் அழிவு ஏற்படும். ஹமாஸை ஒழித்துக்கட்டுவது இஸ்ரேலின் உரிமை மட்டுமல்ல. அது நம் கடமை” என்று அவர் கூறினார்.

ஐ.நா.வுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன், ஆன்தோனியோ குத்தேரஸ் ஐ.நா.வை வழிநடத்த தகுதியற்றவர் என்று கூறி ராஜினாமா செய்ய வலியுறுத்தினார்.

**குத்தேரஸுடன் பேச மறுத்த இஸ்ரேல் பிரதமர்**

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ‘ஐ.நா பொதுச் செயலாளரின் தொலைபேசி அழைப்புகளை நிராகரித்துவிட்டார்” என்று இஸ்ரேலிய தூதர் கிலாட் எர்டன் கூறியுள்ளார்.

ஐநா பொதுச்செயலாளர் பற்றி பேசிய எர்டன், போர் தொடங்கியதில் இருந்து ஆன்தோனியோ குத்தேரஸ் இஸ்ரேலுக்கு வரவில்லை என்பது “தற்செயலாக இல்லை” என்றார்.

அக்டோபர் 7 முதல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் இரண்டு முறை பேசுமாறு குத்தேரஸ் கேட்டுக் கொண்டார் - ஆனால் நெதன்யாகு “அவரது அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார்” என்று எர்டன் கூறினார்.

“களத்தில் என்ன நடக்கிறது என்பது குறித்து தவறான சித்திரத்தை முன்வைக்கும் “ஐ.நா அதிகாரிகளை” இஸ்ரேலில் இருந்து வெளியேற்றுவது அடுத்தபடியாக இருக்க வேண்டும்.” என்று அவர் கூறினார்.

ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் மார்ட்டின் கிரிஃபித்ஸுக்கு இஸ்ரேலிய விசா மறுக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், மற்ற ஐ.நா ஊழியர்கள் “நிராகரிக்கப்படுவார்கள்” என்றார்.

**குத்தேரஸ் கருத்தில் உடன்பாடு இல்லை - பிரிட்டன்**

ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்தோனியோ குத்தேரஸின் கருத்துகளை பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் நிராகரித்துள்ளார். “வெறுப்பு மற்றும் சித்தாந்தத்தால் உந்தப்பட்ட ஹமாஸின் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத தாக்குதலுக்கு எந்த நியாயமும் இல்லை என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.” என்று அவரது செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், ஜெர்மனி அரசின் செய்தித் தொடர்பாளர் குத்தேரஸ் மீது நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**இஸ்ரேலுக்கு ஐநா பொதுச்செயலாளர் விளக்கம்**

ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்தோனியோ குத்தேரஸ் தனது பேச்சு தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருப்பதாக அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

“ஹமாஸ் செய்த பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது” என்றும், “இஸ்ரேலில் ஹமாஸின் கொடூரமான பயங்கரவாதச் செயலைக் கண்டித்ததாகவும்” அவர் விளக்கம் அளித்துள்ளார்.

**குத்தேரஸ் பதவி விலக மீண்டும் வலியுறுத்தும் இஸ்ரேல்**

ஆனால், குத்தேரஸின் விளக்கத்தை ஏற்க மறுத்துள்ள இஸ்ரேல், அவர் பதவி விலக வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டன், ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸின் கருத்தை நிராகரித்ததுடன், அவர் பதவி விலகுமாறு மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார்.

“பொதுச்செயலாளர் தனது வார்த்தைகளை வாபஸ் பெறாததுடன், கூறியதற்கு மன்னிப்புக் கூட கேட்காமல் இருப்பது ஐ.நா.வுக்கு அவமானம். அவர் பதவி விலக வேண்டும்” என்று எர்டன் கூறினார்.

அவர் ‘உண்மையை திரித்து கூறுகிறார்” என்று கூறிய எர்டன், அக்டோபர் 7 அன்று ஹமாஸின் கொடூரமான தாக்குதலுக்கு இஸ்ரேல் மீது ஐ.நா பொதுச்செயலாளர் குற்றம் சாட்டியுள்ளதாக கூறினார்.

“அவரது வார்த்தைகளின் அர்த்தம் என்னவென்றால், ஹமாஸின் செயல்களுக்காக இஸ்ரேலுக்கு குற்ற உணர்வு இருக்கிறது அல்லது குறைந்தபட்சம், படுகொலைக்கு வழிவகுக்கும் ‘பின்னணி” பற்றிய அவரது புரிதலைக் காட்டுகிறது. அப்பாவிகளின் கொலையை எந்த ‘பின்னணி’ யாலும் புரிந்து கொள்ள முடியாது என்பதை புரிந்து கொள்ளாத பொதுச் செயலாளர் பொதுச்செயலாளராக இருக்க முடியாது.” என்று எர்டன் சாடியுள்ளார்.



ஈழநாடு



# இலங்கையை வந்தடைந்த சீனாவின் கடல் ஆராய்ச்சி கப்பல்!

## ஷி யென் 6 கப்பலை எதிர்க்கும் இந்தியா

சீன கடல் ஆராய்ச்சி கப்பலான ஷி யென் 6 கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவிக்கின்றது.

தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கிலேயே இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன கடல் ஆராய்ச்சி கப்பல் இலங்கைக்கு வருகை தருவதற்கு இதற்கு முன்னர் அனுமதி கோரிய நிலையில், இந்தியாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அந்த நடவடிக்கை தள்ளிப் போடப்பட்டிருந்தது.


சீன கப்பல் தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டத்தினர், பல்வேறு சந்தர்ப்பங்களில் மாறுப்பட்ட கருத்துகளை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த கப்பலுக்கு அடுத்த மாதம் நாட்டிற்கு வருகை தர அனுமதிக்கப்பட்டதாக தொலைக்காட்சி ஒன்றுக்கு அண்மையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கருத்து தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே, இந்தக் கப்பல் திடீரென இலங்கையை வந்தடைந்தது.

இந்தக் கப்பல் இலங்கை கடற்பரப்பை அண்மித்த தருணத்திலேயே, கப்பல், சில மணிநேரத்தில் நாட்டை வந்தடையும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.





இந்த மாதம் 10ஆம் தேதி சீனாவிலிருந்து பயணத்தை ஆரம்பித்த ஷி யென் 6 என்ற கப்பல், 15 நாட்களுக்குப் பிறகு இலங்கையை வந்தடைந்தது.

தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், இந்த கப்பல் விரைவில் நாட்டை விட்டு வெளியேறும் என இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

சாதாரண கப்பல் ஒன்று நாட்டிற்கு வருகை தரும் வகையிலேயே இந்தக் கப்பல் நாட்டை வந்தடைந்து உள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிடுகின்றனர்.

### ஷி யென் 6 கப்பல் வருகைக்கு இந்தியா கடும் எதிர்ப்பு

இலங்கைக்கு ஷி யென் 6 கப்பல் வருகை தரவுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து, இந்தியா தொடர்ச்சியாக கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தது.

தென் இந்தியாவிலுள்ள மிக முக்கிய இடங்களை இலங்கைக்கு வருகை தரும் இந்த கப்பலால் ஆய்வு செய்ய முடியும் என்ற அடிப்படையிலேயே இந்தியா இந்தக் கப்பலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக ஊடக செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஷி யென் 6 கப்பல் புதனன்று நாட்டை வந்தடைந்துள்ளது. சீனாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக கடந்த 15ஆம் தேதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சீனா நோக்கிப் பயணமாகியிருந்தார்.

ஷி யென் 6 கப்பல் தனது பயணத்தைத் தொடங்கி, ஐந்து நாட்கள் கடந்த சந்தர்ப்பத்திலேயே ரணில் விக்ரமசிங்க சீனா நோக்கிப் பயணித்திருந்தார்.

கடந்த 15ஆம் தேதி நாட்டிலிருந்து புறப்பட்ட ரணில் விக்ரமசிங்க 16ஆம் தேதி சீனாவை சென்றடைந்ததுடன், அங்கு நான்கு நாட்கள் தங்கிருந்து உயர் மட்ட சந்திப்புகளை நடத்தியிருந்தார்.

இந்த விஜயத்தின்போது, சீனா ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இவ்வாறான சீன விஜயம் நிறைவடைந்து, சில தினங்களிலேயே இந்த கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

ரணில் விக்ரமசிங்கவின் விஜயத்தின் போது, இந்தக் கப்பலை அனுமதிக்குமாறு சீனாவால் வலியுறுத்தப்பட்டிருக்கலாம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### சீன கப்பலில் நடந்த விசேஷ சந்திப்பு

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள சீனாவின் ஆராய்ச்சிக் கப்பலில் வியாழனன்று முற்பகல் விசேஷ கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் நீரியல் வளங்கள் ஆய்வு அபிவிருத்தி மற்றும் முகவர் நிறுவனம் (நாரா), இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம், சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் ருஹுணு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தக் கப்பல் இலங்கை கடற்பரப்பிற்குள் ஆய்வுகளை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ள போதிலும், இலங்கை வெளிவிவகார அமைச்சு அதற்கான அனுமதியை இன்று மதியம் வரை வழங்கியிருக்கவில்லை.

இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை நடத்துவதற்கு இதற்கு முன்னர் சீனா அனுமதி கோரியிருந்ததாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு மாத்திரமே தற்போது வரை சீனா ஆராய்ச்சி கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள சீனாவின் ஷி யென் 6 கப்பலில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து, நீரியல் வளங்கள் ஆய்வு அபிவிருத்தி மற்றும் முகவர் நிறுவனத்தின் (நாரா) பிரதான விஞ்ஞானி கணபதிபிள்ளை அருளானந்தன் கருத்து தெரிவித்தார்.

“இந்தக் கப்பல் என்ன நோக்கத்திற்காக வந்துள்ள என்பது பற்றி கலந்துரையாடினோம். இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை நடத்த வந்துள்ளதாகவும், இலங்கையில் ஆய்வுகளை முடித்துக்கொண்டு மத்திய இந்திய கடல் பரப்புககுச் செல்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வளிமண்டலத்திற்கும், கடலுக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை



ஆராய்வதே நோக்கம். கடலில் ஏற்படுகின்ற மாற்றம் தான், வளிமண்டலத்தில் ஏற்படுகின்ற மாற்றமாகும். கடலுக்கும், வளிமண்டலத்திற்கும் இடையிலான தொடர்புகளை ஆய்வு செய்து, அதன் மூலம் காலநிலையைத் துல்லியமாக எதிர்வு கூறுவதற்கும், காலநிலை மாற்றங்களால் கடலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் ஆய்வு செய்வதற்குமான கப்பல்தான் இது என்றே சீன அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்,” என நாரா நிறுவனத்தின் அவர் தெரிவித்தார்.

ஐந்து நாட்கள் ஆய்வு செய்வதற்கான அனுமதியையே, இலங்கை வெளிவிவகார அமைச்சிடம், சீன கப்பலான ஷி யென் 6 கோரியுள்ளது.

ஆனால், இந்த அனுமதி எப்போது கிடைக்கும், இந்தக் கப்பல் இலங்கையை விட்டு எப்போது வெளியேறும் என்பது தொடர்பிலான எந்தவித தகவல்களும் தனக்குத் தெரியாது என நாரா நிறுவனத்தின் பிரதான விஞ்ஞானி கணபதிபிள்ளை அருளானந்தன் கூறினார்.

### இலங்கைக்கு வருகை தந்த போர் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்கள் தொடர்பான தகவல்கள்

இலங்கைக்கு வருகை தந்த கப்பல்களில், யுவான் சேங் 5 கப்பலே, மிகவும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

கடந்த 2020ஆம் ஆண்டு இலங்கைக்கு 43 போர் கப்பல்கள் வருகை தந்துள்ளன.

இவற்றில் 15 கப்பல் இந்தியாவிற்கு சொந்தமானவை என்பதுடன், 9 கப்பல்கள் ஜப்பானுக்கு சொந்தமானவை என இலங்கை கடற்படையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று, 2021ஆம் ஆண்டு இலங்கைக்கு 36 போர்க் கப்பல்கள் வருகை தந்துள்ளதுடன், அவற்றில் 12 கப்பல்கள் இந்தியாவிற்கு சொந்தமானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த போர் கப்பல்களில், ரஷ்யாவிற்கு சொந்தமான நீர்மூழ்கி கப்பல்கள் இரண்டும் அடங்குவதாகக் கூறப்படுகின்றது.

இந்த இரண்டு நீர்மூழ்கி கப்பல்களும் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளன.

கடந்த ஆண்டு 31 போர் கப்பல்கள் இலங்கை வந்துள்ளதுடன், அவற்றில் 14 கப்பல்கள் இந்தியாவிற்கு சொந்தமானவை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, 2023ஆம் ஆண்டின் இதுவரையான காலம் வரை 16 போர் கப்பல்கள் வந்துள்ளன.

அவற்றில் 4 கப்பல்கள் இந்தியாவிற்கு சொந்தமானவை எனவும், மூன்று அமெரிக்காவிற்கு சொந்தமாவை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவிற்கு சொந்தமான போர்க் கப்பல்களே அதிகளவில் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.


தயா இவன்ட் மனேஜ்மன்ட் ஏற்பாட்டில்
இரண்டாவது தடவையாக
தீபத் திருநாளை முன்னிட்டு
பண்ணை கடற்கரைப் பூங்காவில்
காணி வேல் களியாட்டமும்
உணவுத் திருவிழாவும்
03.11.2023 ஆரம்பமாகிறது
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நுழைவாயில் கட்டணம் இலவசம்


Ask MEDIA
தாயகத்திலுள்ள
உங்கள் பாடசாலைகளில்
நடக்கும் விளையாட்டு
நிகழ்வுகளை
DAN SPORTS
ரிவியில்
நேரலையாகவும்
FaceBook, Youtube
இலும்
பார்த்து மகிழுங்கள்
விபரங்களுக்கு
0094 757 900 555
askmediadan@gmail.com


தாயகத்திலுள்ள
உங்கள் கிராமத்து ஆலயங்களின்
உற்சவங்களை
உங்கள் வீடுகளில்
இருந்தவாறே
ஓம் ரிவியில்
நேரலையாகவும்
FaceBook, Youtube
இலும்
பார்த்து பரவசமடையுங்கள்
விபரங்களுக்கு
0094 757 900 555
askmediadan@gmail.com